கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(09.04.2017 - 09 சித்திரை 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 157, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி


GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

அனைவருக்கும் உயிர்த்த இயேசு ஆண்டவரின் ஆசீர் நிரம்பக் கிடைப்பதாக இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்!!!!

# பாஸ்கா மக்களாக நாமும் உயிர்த்தெழுவோம்

ஆண்டவரின் உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்




- மர்சலின் ஹீன்கெந்த -

## இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் பாஸ்கா செய்தி – 2017

விசுவாசம் என்னும் கொடையை எம் மத்தியில் பற்றி எரியச் செய்த புனித யோசேவ்வாஸின் ஒப்பற்ற பணி எமக்குள் இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. அதே வேளை இக்காலமானது குருக்கள், துறவிகள், மற்றும் பொதுநிலையினர் ஆகிய நாம் எமது பணியின் அர்ப்பணத்தை இலங்கையின் அப்போஸ்தலரான புனித யோசேவ் வாஸின் பாதச் சுவடுகளில் மீள் அர்ப்பணிக்க தேவையான நேரமாக அமைகின்றது. உயிர்த்த இயேசு தம் சீடர்களுக்குத் தோன்றி சமாதானத்தை அவர்களுக்குக் கொடையாக அளித்தார். உண்மையான சமாதானம் என்பது நீதியிலிருந்து வெளிப்படுவதாகும். எம் நாட்டு மக்கள் நீதியையும், உண்மையையும் நிலைநாட்ட சரியான வழிகளைத் தேடுகின்ற இந்த நேரத்திலே நாம் கிறிஸ்துவின் உயிர்ப்பைக் கொண்டாடுகின்றோம். எம் தாய்நாட்டில் ஒற்றுமையையும், ஒப்புரவையையும் மக்கள் மத்தியில் வலுவடையச் செய்ய பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. நாம் ஒருவர் மற்றவரை மதித்து எம் மத்தியில் காணப்படும் அற்ப வேறுபாடுகளை தவிர்த்து, மற்றவர்களுடைய மனிதாபிமானத்தை பாதுகாத்து மதிப்பளிக்கின்ற பொழுதுதான் இவற்றை செய்ய முடியும். எனவே இப்பாஸ்கா விழாவிலே, எமது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் அமைதியையும், நீதியையும் கேட்டு மன்றாடுவோம்.

☛ 15

✠ மேதகு ஆயர் கலாநிதி. J. வின்ஸ்ரன் S. பெர்னான்டோ
தலைவர் – இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை.

✠ மேதகு ஆயர் கலாநிதி D. வலன்ஸ் மன்டிஸ்
செயலாளர் – இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம்.

## அனைத்து குருக்கள் மற்றும் பொதுநிலையினருக்கு கர்தினால் ஆண்டகையின் அறிவித்தல்

☟ 02

## கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயரின் வாழ்த்துச் செய்தி



பாஸ்கா பெருவிழா கிறிஸ்தவ மக்களின் மிக முக்கியமான திருநாளாகும். “கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்” (1 கொரி 15:14) என்னும் தூய பவுலின் வார்த்தைகளால் இது உறுதி செய்யப்படுகின்றது.

☟ 02

## உயிர்ப்பின் மக்களாய் வாழ்வோம்

உயிர்ப்பின் அனுபவம்
ஒவ்வொருவருக்கும் தேவை
மரணம் என்னும் ஒலி ஓசைக்குள்
ஓராயிரம் இராகங்கள்
ஒழிந்து கிடக்கின்றன

பக்குவமாய் உயிர்ப்பு எனும் கரங்கள்
கொண்டு அதை மீட்டினால்
உயிர்ப்பு நம் வாழ்வில் விஸ்வரூபம் எடுக்கும்
உயிர்ப்பு நம் வாழ்வில் ஒளி ஏற்றும்
உயிர்ப்பு நம் வாழ்வில் மாற்றத்தை
விதைக்கும் - உயிர்ப்பு நம் வாழ்வில்
புது சக்தியை ஊற்றும்
உயிர்ப்பு சமுதாய தீமைகளை வேரறுக்கும்
அப்போது நாமும் இறை இயேசுவின்
உயிர்ப்பின் சாயலை தாங்கி
உயிர்ப்பின் மக்களாய் வாழலாம்

**உயிர்ப்பின் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்!!!**

**ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே. இன்று அக்களிப்போம் அகமகிழ்வோம்**






## 01 அனைத்து குருக்கள்

இவ்வருட சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டானது கத்தோலிக்கராகிய நாங்கள் மிகவும் பக்தியோடு நடாத்தும் பெரிய வெள்ளி தினத்தன்று கொண்டாடப்படவுள்ளது. பெரிய வெள்ளியானது சர்வதேச கத்தோலிக்க திருவழிபாட்டு நாட்காட்டியின் படி புதுவருட தினத்தன்று அமைவதால், அதை மாற்ற முடியாத நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது.

கிறிஸ்தவரல்லாத எமது சகோதர, சகோதரிகள் இத்தினத்தை மகிழ்ச்சியாய் கொண்டாடுவதால், கத்தோலிக்கராகிய நாம் பெரிய வெள்ளி வழிபாடுகளை நடாத்தும்போது, அச்சகோதரர்களின் மனநிலைக்கு கேள்வி குறியாக அமையாதவாறு செயற்பட வேண்டியது முக்கியமானதாகும்.

பெரிய வெள்ளி வழிபாடு மிகுந்த பக்தியோடு கடைப்பிடிக்க வேண்டிய வழிபாடானதால், அன்றைய தினம் வழிபாடுகளை ஒழுங்கு செய்யும்போது அவர்களின உணர்வுகளைக் கருத்தில் கொண்டு அதனை ஒழுங்கு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## 01 கொழும்பு உயர்...

நாற்பது நாள் விசேட ஆயத்தத்தின் பின்பு கிறிஸ்தவ-ர்களாகிய நாம் இவ்விழாவைக் கொண்டாடுவதன் நோக்கம் உயிர்ப்பின் அர்த்தத்தை எமது வாழ்வாக்கிக் கொள்வதே ஆகும்.

உயிர்ப்பானது பௌதீக வாழ்க்கையைக் கடந்த செல்லும் ஒரு உன்னத நிகழ்வாகும். கிறிஸ்து எம்மைப் போன்று மனிதராகப் பிறந்து பாவத்தை தவிர மற்ற அனைத்திலும் மனிதனுக்கு ஒப்பாகி, இறைத்தந்தையின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து அவர் பயணித்த பாதையின் நிறைவே இவ் உயிர்ப்பாகும்.

உயிர்த்த ஆண்டவர் மீண்டும் இறப்பிற்கு அப்பாற்பட்டு எழுந்தருளியது, கிறிஸ்தவர்களாகிய எம்முடைய உயிர்ப்பிற்கு ஒரு முன்னடையாளமாகவும், இறைவார்த்தைக்கு இசைவாக வாழ்பவர்களின் இறுதி முடிவு எவ்வாறானதாக இருக்கும் என்பதை எடுத்துக்காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

இயேசுவுக்கு இறை தந்தையின் விருப்பதை நிறைவேற்றுவது மிக இலகுவான, சொகுசான காரியமாக இருக்கவில்லை, மாறாக எதிர்காலம் தெளிவற்ற, கரடு முரடான மற்றும் பல சாவல்களுக்கு மத்தியில் தளராத, இறைதந்தையில் ஆழமான நம்பிக்கை கொண்டு பயணித்தமையானது நாமும் அவரது பாதையை சவால்களின் மத்தியிலும் பின்பற்றி வாழ அழைப்புவிடுக்கின்றது.

இயேசுவின் உயிர்ப்பானது இயற்கைக்கு மாறானதொன்று அது மிகவும் உன்னதமான நிலையாகும். திருத்தூதர்கள் மூடப்பட்ட அறையினுள் தனித்திருந்த போது உயிர்த்த இயேசு அவர்கள் மத்தியில் காட்சி அளித்ததையும், கடல் நடுவில் நடந்து திருத்தூதர்களின் நடுவில் தோன்றியதையும், திருத்தூதர்களோடு உணவருந்திய விதத்தையும், எம்மாவுஸ் பயணத்தில் சீடர்களோடு உரையாடிய விதங்கள் யாவும் எமக்கு எடுத்துக்காட்டுவது, இயேசு தமது உயிர்ப்பைக் கடந்து இயற்கையான வாழ்வையும் தாண்டி சென்றாலும், இயற்கையான வாழ்வோடு தொடர்பு பட்டு அறநெறி வாழ்வுக்குள் நுழைந்தார் என்பதேயாகும்.

எனவே அனைத்து பாஸ்கா விழாவிலும் நாமும் கடந்து செல்ல வேண்டும். இறைவார்த்தையில் இருந்து எம்மைப் பிரிக்கும், இறை திட்டத்திற்கு இசைவாக வாழ எமக்கு இடமளிக்காத அனைத்திலுமிருந்து விலகி கிறிஸ்துவைப் போல இறை திட்டத்தினுள் எம் வாழ்வையும் கட்டியெழுப்ப, எம் வாழ்க்கையின் அனைத்துப் போராட்டங்களிலும் இருந்து நாம் வெற்றி கொள்ளவேண்டும்.

ஆகவே கிறிஸ்துவின் உயிர்ப்பு கடந்து செல்லும் நிகழ்வு எமக்கு ஞாபகமூட்டும், உற்சாகமூட்டும் பாஸ்கா விழாவாக அமைய வாழ்த்துகின்றேன்.

இறையாசீருடன்

**அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**பேராயர் - கொழும்பு உயர் மறைமாவட்டம்**

**பாஸ்காப் பெருவிழாவை முன்னிட்டு கொழும்பு கத்தோலிக்க அச்சகம் இம்மாதம் 8ம் திகதி முதல் 17ம் திகதி வரை முடப்பட்டிருக்கும் என அறியத்தருகின்றோம்.**
**மீண்டும் 18ம் திகதி செவ்வாய்கிழமை வழமைபோல் அச்சகம் திறந்திருக்கும் என தெரிவித்துக் கொள்கின்றேன்**
**- இயக்குனர் -**

# வெள்ளவத்தையில் திறந்தவெளிச் சிலுவைப்பாதை



இவ்வாண்டானது, புனித யோசப்வாஸிற்காக அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. புனித யோசப்வாஸ் காலணிகளின்றி, வெற்றுக்கால்களுடன், கஸ்டத்தின் மத்தியிலும், பல இடங்களுக்குச் சென்று இறைவார்த்தையை போதித்ததோடு மக்கள் மத்தியில் புதுமைகளையும் புரிந்தார். இவரது மகத்தான இறைபணிகள், நமது பங்கின் இறைவழிபாட்டுக் குழுவிற்கு ஒரு ஆன்மீக ஊக்கத்தையும், தூண்டுதலையும் அளித்துள்ளது. இதன் காரணமாக, வழிபாட்டுக் குழுவின் தலைவரான அருட்தந்தை மனோகுமாரன் மற்றும் உதவிபங்குத்தந்தை அருட்பணி சஷிக்கா றொட்றிக்கோ ஆகிய அடிகளார்களினால் சித்திரை 14ம் திகதி திறந்தவெளி பொதுச் சிலுவைப் பாதையை நடாத்துவதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளார்கள்.

இந்த திறந்தவெளி பொதுச் சிலுவைப்பாதையானது புனித லோரன்ஸ் தேவாலய வரலாற்றில், முதன் முறையாக இடம் பெறப்போகின்றது, என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இச்சிலுவைப்பாதை பங்கு மக்களுக்கு பெரிய ஆசிர்வாதமாகவும், சிறப்புமிகு சலுகையாகவும் இருக்கிறது. மக்கள் தங்கள் இல்லங்களுக்கு அருகாமையில் இயேசுவின் திருப்பாடுகளைச் தரிசிக்கப் போகின்றார்கள். பெரிய வெள்ளி இத்திறந்தவெளி சிலுவைப்பாதையானது காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகின்றது. இரத்த வியர்வை சிந்த தனது தோள்களில் இயேசு பாரச்சிலுவையைச் சுமந்த வண்ணம் காட்சிதரும், ஆளுயரமான திருச்சுரூபம், ஒலிபெருக்கியுடன் மோட்டார் கார் இரத்தத்தில் பவனி வரும்.

பக்கம் 15



களுத்துறை மறைக்கோட்ட கத்தோலிக்க மக்களுக்காக ஒரு நாள் தவக்கால தியானம் கடந்த 12.03.2017 அன்று ஞாயிற்றுக்கிழமை ஹெரனை புனித மார்டீன் டி போரஸ் தேவாலயத்தில் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை அவர்களின் தலைமையில் காலை 9.30 - 4.30 மணி வரை நடைபெற்றது. இத்தியானத்தில் பங்கு பற்றிய மக்களை படத்தில் காணலாம்.

**தகவல் : உதவிப்பங்குத் தந்தை.**

## புனித யோசேப் வாஸ் ஆண்டின் தபசு கால திருயாத்திரை

இலங்கை அப்போஸ்தலரான புனித யோசேவ்வாஸின் பாதங்கள் பதிக்கப் பெற்ற வணக்கத்துக்குரிய கொண்சால்வேஸ் அடிகளாரின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள, பழம் பெருமை வாய்ந்த போளவத்தைத் தேவாலயப் பங்கு மக்கள், 2017.03.12 ஞாயிறுக்கிழமை திருயாத்திரை ஒன்றை மேற்கொண்டனர்.

பக்கம் 15

**திருத்தைலம் ஆசீர்வதித்தல் திருப்பலி இம்மாதம் 10.04.2017 அன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு சகல புனிதர்கள் ஆலயத்தில் நடைபெற உள்ளது.**


## அறிவித்தல்

இவ்வாண்டு விசேட விதமாக புனித யோசேவ்வாஸ் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டிப்பதால், புனித யோசேவ்வாஸின் பிறந்த நாளை முன்னிட்டு (சித்திரை 21) அதை சிறப்பிக்கும் முகமாக விசேட வழிபாடுகளை நடாத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்..

இதற்கிணங்க கொழும்பு உயர் மறைமாவட்ட அனைத்துப் பங்குகளிலும், கத்தோலிக்க பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களிலும் விசேட செப வழிபாடு ஒன்றை நடாத்தவும், மேலும் புனிதரின் பிறந்த நாளை முன்னிட்டு மூன்று நாட்கள் அதாவது சித்திரை 18ஆம் திகதி தொடக்கம் நவநாட்கள், திருப்பலி அல்லது நற்கருணை வழிபாட்டை நடாத்தி இறுதி நாளில் (21.04.2017) உங்கள் ஆலயங்களைச் சுற்றி சிறிய திருச்சுரூபபவனி ஒன்றை ஒழுங்கு செய்து நடாத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**அதிமேதகு. கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை.**



“உங்களுக்குள் இந்த நற்செயலைத் தொடங்கியவர், கிறிஸ்து இயேசுவின் நாள் வரை அதை நிறைவுறச் செய்வார் என உறுதியாய் நம்புகிறேன்.” (பிலி 1: 6)

இரத்தினபுரி மறைமாவட்டத்தில், பலாங்கொடை, தஞ்சஞ்தன்னையில், புதியதோர் “கல்வாரி செவன” புனித பரலோக அன்னை ஆலய வளாகத்தில் மறைமாவட்ட ஆயர் மேதகு கிளிற்ரஸ் பெரேரா ஆண்டகையினால் 13.03.2017 அன்று விசுவாசிகளுடைய தவக்கால தியானத்திற்காக திறந்து வைக்கப்பட்டது. ஆண்டவரின் கல்வாரிப் பாடுகளின் திருச் சொருபம் மற்றும் இந்த சிலுவைப் பாதையின் நிர்மாணப் பணிகள் அனைத்தும் இரத்தினபுரி குரு முதல்வரும், பொருளாளருமாகிய அருட்பணி. டேமியன் பர்னாந்து அடிகளாரின் வழிகாட்டுதலில், செபமாலைத் தாசர் சபையின் குருக்களின் ஆலோசனையில், கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தாலும், பழைய மாணவர் பட்டதாரிகள் ஒன்றியத்தாலும் ஒன்றிணைந்து நிர்மானிக்கப்பட்டு ஆயரால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. செபமாலைத் தாசர் துறவிகளால் பராமரிக்கப்படும் இந்த துறவற இல்லம், அழகிய மரங்களாலும்...

பக்கம் 15






ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
09, சித்திரை 2017 ஞாயிற்றுக்கிழமை.

# நாமும் கிறிஸ்துவோடு உயீர்த்தெழுவோம்

தவக்காலத்தின் இறுதிக்காலமான புனித வாரத்திற்குள் நுழைந்து விட்டோம். மனிதன் பொதுவாக துன்பத்தையும், துக்கத்தையும், சோதனையையும், வேதனையையும் விரும்புவதில்லை. ஆனால் நம் ஆண்டவர் இயேசு சிலுவையினூடாகத்தான் மீட்பைப் பெற முடியும் என்பதை தமது உயிரையே எமக்களித்து மாதிரி காட்டினார். இயேசுவிடம் திசையும் விசையும் இருந்தன. இயேசுவின் நோக்கு, இலட்சியம் சிலுவை ஒன்று மட்டுமே. அதனால்தான் முள்முடி அடித்தபோதும், கசையடிகள் உடலை கிழித்தபோதும், மும்முறை கீழே விழுந்தபோதும் அவரது கண்களில் தெரிந்தது சிலுவை மட்டுமே. அதனால்தான் வீரத்துடன் எழுந்து நடந்தார். சிலுவையானது அன்பு, அரவணைப்பு, மன்னிப்பு என்று மூன்று அர்த்தங்களை கூறுகின்றது. உண்மைதான் இறுதி இராவுணவின்போது தன்னை காட்டிக்கொடுக்கவிருக்கும் யூதாஸின் கால்களையும் இயேசு கழுவிட மறக்கவுமில்லை. மறுக்கவுமில்லை. யூதாஸ் தன்னை காட்டிக்கொடுக்க வந்தபோது யூதாஸை நோக்கி நண்பா முத்தமிட்டா என்னை காட்டிக் கொடுக்கின்றாய் என்று கேட்கின்றார். நண்பா என்று யூதாஸை பார்த்துக் கூறும்போது அவ்விடத்தில் அன்பும், அரவணைப்பும், மன்னிப்பும் ஒருங்கிணைந்து காணப்படுவதை காண்கின்றோம்.

எமது பாவங்கள் அனைத்தையும் பாரங்களாக சுமைகளாக இயேசு தனது தோள்களில் சுமந்து கல்வாரி மலையை அடைந்துவிட்டார். அவரோடு பரிசேயர் படைவீரர் பொதுமக்கள் என்று பெருங்கூட்டமே சென்றது. எதற்காக? ஆறுதல் அளிப்பதற்காகவா? இல்லை வேடிக்கைப் பார்ப்பதற்காக. ஆனால் அத்தனை மக்களுடனும் இயேசுவிற்கு ஆறுதல் அளிக்க சென்றவர்கள்தான் களங்கமற்ற அன்னை மரியாவும், அர்ப்பணத்திற்கு அடையாளமான திருத்தூதர் யோவானும், மனத்துயர்கொண்டு புதுவாழ்வுப்பெற்ற மகதலா மரியாவும். பெரிய வெள்ளி அன்று நாமும் இவர்களில் ஒருவராக செல்வோம் சிலுவையடிவாரம். சிலுவையில் தொங்கும் இயேசுவை உற்றுநோக்குவோம். நான் செய்த எப்பாவத்தின் நிமித்தம் சிலுவையில் இயேசு தொங்கிக் கொண்டிருக்கின்றார் என்று சிந்திப்போம். அப்பாவத்திலிருந்து விலகி மனந்திரும்பி புதுவாழ்வுப் பெற்று சிலுவையில் தொங்கும் இயேசுவை கீழே இறக்குவோம். இயேசு இறந்தார் என்பது வரலாறு. ஆனால் இயேசு எனக்காக இறந்தார் என்பதை உணர்ந்து ஏற்றுக்கொள்வதுதான் உண்மையான மீட்பு. இதுதான் பெரிய வெள்ளி எமக்குத் தரும் பரிசு.

இயேசுவின் இறப்பிற்கு பின்பு அவரது சீடர்கள் சிதறிச் சென்றார்கள். இனி எமக்கேது வாழ்வு என்றிருந்தார்கள். ஆனால் மூன்றாம் நாள் இயேசு உயிர்த்தார். இயேசு மட்டுமா உயிர்த்தார். இல்லை. அவரோடு சீடர்கள் உயிர்த்தனர். இயேசுவின் மதிப்பீடுகள் உயிர் பெற்றன. மனிதனின் நம்பிக்கைகள் உயிர் பெற்றன. இதுபோல் தவக்காலம் முழுவதும் சிலுவைப்பாதை, தியானம், திருயாத்திரை, ஒறுத்தல், திருப்பலி என்று ஒன்றுவிடாது அனைத்தையும் நிறைவேற்றிருப்போம். இவை எமக்கு பலன் கொடுக்க இயேசுவோடு சேர்ந்து நாமும் எமது நல்ல புதிய எண்ணங்கள் சிந்தனைகள் அன்பு மொழிகள் அன்புச் சொற்கள் மற்றும் அன்புச் செயல்களால் புது உரு கொடுப்போம். அப்போது நாமும் கிறிஸ்துவோடு உயிர்த்தெழுவோம் என்பது உறுதியாகும்.

இயேசு உயிர்த்தார்! இயேசுவில் நாமும் உயிர்ப்போம்! அல்லேலூயா!

இறையாசீருடன்
ஆசிரியர்

# குருத்து ஞாயிறு



**ஒருவர் தனது தினசரி வாழ்க்கையில் நன்மைகள் செய்ய வேண்டுமென்றால் கடினமான சூழல் எனும் கல்வாரி இல்லாமல் செய்துவிட இயலாது.**



## குருத்து ஞாயிறு

எமது தாய் திருச்சபையானது இன்று (09.04.2017) புனித வாரத்தின் தொடக்கத்தில் இருக்கிறது. குருத்து ஞாயிறு என்ற பெருவிழாவைக் கொண்டாடுகிறது. துன்பம் இல்லாமல் இன்பம் இல்லை என்ற மையக் கருத்தை இவ்விழா கொண்டுள்ளது.

குருத்து ஞாயிறை நாம் புனித வாரத்தின் நுழைவாயில் எனவும், தவக்காலத்தின் உச்சக்கட்டம் எனவும் திருப்பாடுகளின் தொடக்கம் எனவும், இயேசுவின் இலட்சிய பயணத்தின் இறுதி நிலை எனவும், கூறுகிறோம். கடவுளின் மீட்பும், விடுதலையும், அவர் தம் மக்களுக்கு உண்டு என்ற கருத்தை குருத்து ஞாயிறு செய்தியாக நமக்கு புலப்படுத்துகின்றது. விவிலியத்தில் முன்னறிவித்தபடியே, ஆண்டவராகிய மெசியா பாடுகள்பட்டு மகிமை அடையவும், மக்களுக்கு மீட்பளிக்கவும், வேண்டும் என்பதையும் தெளிவுர எடுத்துக்காட்டுகின்றது. எனவே இந்த குருத்து ஞாயிறு கொடுக்கும் செய்திகளை பார்ப்போம்.

### ஓசான்னா தாவீதின் புதல்வா...

குருத்து ஞாயிறு திருவழிபாடு மக்களின் நிலையற்ற தன்மையைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. முதலில் ஆண்டவருடைய மகிழ்வான வருகையைக் கண்ட மக்கள் அவரை "ஓசான்னா ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக" (மாற்கு 11:9) என்று பாடிப் போற்றுகின்றனர். அதே மக்கள் அவருடைய இன்னலான சூழலில் "அவர் ஒழிக" அவனைச் சிலுவையில் அறையும் மாற் 15:3) என்று பழித்துரைத்தனர்.

இன்றைய உலகத்தின் போக்கும் இதுதான் ஒருவர் வளமுடன் இருக்கும்போது அவரைப் புகழ்ந்து நல்ல உறவினை வெளிப்படுத்திக் கொண்டிருப்பார்கள். அதேவேளையில் அவர் சோர்ந்து, எல்லாம் இழந்து நிற்கும் நிலையில் இருக்கும்போது அவரை ஏளனமாகப் பேசி கைவிட்டு ஓடிவிடும் சமுதாயத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இயேசுவுக்கு நடந்ததும் இதே நிலைதான். இயேசுவிடம் நன்மையைப் பெற்ற மக்கள் அவரைப் புகழ்ந்து பேசி இருந்தவர்கள். அவருக்கு எதிராக எதிர்ப்பு குரல் எழுப்பினார்கள்.

### இல்லாமையில் இயங்கும் இறைவன்

நாம் நம்மையே முழுமையாக வெறுமையாக்கும் போதுதான் ஆண்டவரில் நிறைவு காண்கிறோம். குருத்து ஞாயிறானது. நம் ஆண்டவர் இயேசு தம்மையே முழுமையாக கையளிப்பதற்கு முதற்படி எடுத்து வைக்கிறார். இயேசு தம் வாழ்நாளில் எதையுமே தமக்காக உரிமை கொண்டாடியதோ அல்லது தனக்காக எதையும் வைத்திருக்கவோ இல்லை. அவர் அனைத்தையும் துறந்த இறைமகன், தன் உயிரையே இழந்துவிட மும்முரமாக அடியெடுத்து வைக்கிறார் குருத்து ஞாயிறன்று.

### துன்பமின்றி இன்பமில்லை

ஒருவர் தனது தினசரி வாழ்க்கையில் நன்மைகள் செய்ய வேண்டுமென்றால் கடினமான சூழல் எனும் கல்வாரி இல்லாமல் செய்துவிட இயலாது. துன்பங்கள்தான் ஒருவரடைய உண்மையான சுபாவத்தை எடுத்துக்காட்டுகின்றது. இயேசுவின் பாடுகளின் வாரத்தில் நுழையும் நாம் அவரின் அளவிட முடியாத துன்பங்கள் வழியாக தான் மீட்பு என்னும் இன்பம் கிடைத்தது.


### குருத்தோலை வெற்றியின் அடையாளம்

பாஸ்கா திருவிழாவிற்கு வந்த பெருங்கூட்டம் இயேசு எருசலேம் வருகிறார் என்பதை அறிந்து விழா கொண்டாட அவரை நோக்கி சென்று இணைகிறது. இயேசுவின் எருசலேம் நுழைவு உலகம் அனைத்தும் மகிழ வேண்டிய தருணம் என்று குருத்துக்கள் நினைவூட்டுகின்றன. குருத்தோலை என்பது வெற்றியின் அடையாளம். ஆதி கிறிஸ்தவர்கள் கல்லறைகளில் குருத்தோலைகளை வைத்திருந்தனர். ஏனென்றால் கிறிஸ்து சாவின் மீது வெற்றிக் கொண்டு உயிர்த்தெழுந்தது-போல் மனிதரும் உயர்த்திட வேண்டுமென்ற கருத்தை தருகிறது.

15

## உண்மை உறைக்கும்

கமிலஸ்











# பெரிய வியாழன் – தியாகத்தின் நாள்

அன்பே உருவான இயேசு தம் வாழ்வாலும், வார்த்தையாலும், அன்பை வெளிப்படுத்தினார்.

கிறிஸ்துவின் பிரசன்னமே நற்கருணை பிரசன்னம் உலக இறுதிவரை வாழ, அனைவரும் மீட்புப் பெற நற்கருணையை உண்டாக்கினார்.



## இயேசுவின் இறுதி உணவு விழா

பெரிய வியாழன் தியாகத்தின் திருவிழா. மானிடம் என்றும் வாழ நம் ஆண்டவர் இயேசு தன்னையே உடைத்துக் கொடுத்த உன்னத விழா, தூய நற்கருணையை ஏற்படுத்தி எப்பொழுதும் இறைவன் நம்மோடு பிரசன்னமாகும் அன்பின் விழா. குருத்துவத்தை ஏற்படுத்தி இறைபணியாளர்களை அருள்பொழிவு செய்த இரக்கத்தின் திருநாள். ஒருவன் மற்றவருக்கு துணை நின்று, பணிவிடைப் புரியும் தாழ்ச்சியின் திருநாள்.

உறவும், உணவும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது இவை இரண்டடையும் பிரித்துப் பார்ப்பது இயலாது. அதனால் தான் எந்த நிகழ்வாக இருந்தாலும் விருந்து முதன்மை பெறுகிறது. பிறந்த நாளோ, கல்யாணமோ எல்லாவற்றிலும், விருந்து அவசியம் இடம் பெறுகின்றது. உணவு உறவை வளர்க்கின்றது. உணவு வேண்டாம் என்கின்றவர்கள் உணவு உண்ணமாட்டார்கள் உணவு வேண்டாம் என்றால், உறவு வேண்டாம் என்று அர்த்தம்.

✳ இயேசு உணவிற்கும், உறவுக்கும் உள்ள மகிமையை உணர்கிறார். அதனால் தான் விருந்தில் பங்கேற்கிறார்.
**உதாரணம் :** கானாவூர் திருமணத்தின் (யோவான் 2:1-12)
✳ சீமோன் என்கிற பரிசேயன் இல்லத்தில் (மாற் 14:3)
✳ சக்கேயு என்கிற வரி தண்டுபவரின் வீட்டில் (லூக் 10:5-10)
✳ மார்த்தா மரியாவின் இல்லத்தில் (யோவான் 12:1-2)
✳ 5000 பேருடன் (லூக் 9:11-17)

விருந்தில் அன்பும், தோழமையும் பிறக்கிறது. மகிழ்ச்சி ஏற்படுகின்றது. வேறுபாடுகள் மறுக்கப்படுகின்றன. ஒருவர் ஒருவரை ஏற்றுக் கொள்கின்றார்கள். ஒற்றுமையாக இருக்கின்றார்கள். பகிர்ந்தளிக்கும் பண்பு வளர்கிறது. ஒரே குடும்பம் என்ற சகோதர உணர்வும், மனித நேயமும் மலர்கின்றன.

இவையனைத்தும் நிகழ வேண்டு மென இறைவன் விருந்து படைக்கின்றார். அந்த விருந்தே பெரிய வியாழன் நிகழ்வு. அன்று மூன்று விழாக்களை கொண்டாடுகின்றோம்.

**நற்கருணை அன்பின் வெளிப்பாடு :** அருள் வாழ்வின் ஒற்றுமையின் சின்னம். வாழ்வின் மையம். ஆன்மீக உறவு என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. உலகின் மீது அன்பு கொண்ட இறைவன் தன் ஒரே மகனை உலகின் மீட்புக்காக உலகிற்கு அனுப்பினார். அன்பே உருவான இயேசு தம் வாழ்வாலும், வார்த்தையாலும், அன்பை வெளிப்படுத்தினார். இவ்வுலக மனிதர்கள் நாம் செய்யும் பாவங்க-ளுக்காக இயேசு தந்தை இறைவனின் விருப்பத்தை ஏற்று தன்னையே தகனப் பலியாக்கினார். உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு கூட இருப்பேன் என்று வாக்களித்து இன்றும் நற்கருணை வழி நின்று நம்மோடு வாழ்கின்றார்.

மனிதம் மலர வேண்டும், மானிடம் வாழ வேண்டும் என்பதே இறைமகன் இயேசுவின் இறையாட்சிக் கனவு. கூடி வாழவும், பகிர்ந்துண்டு ஒற்றுமை பேணவும், பணித்தார். கிறிஸ்துவின் பிரசன்னமே நற்கருணை பிரசன்னம் உலக இறுதிவரை வாழ, அனைவரும் மீட்புப் பெற நற்கருணையை உண்டாக்கினார். அநீதியும் அடக்கு முறையும். அதிகார அத்துமீறல்களும், ஒடுக்குவதும், ஒதுங்குவதும் அறவே இல்லாத ஒரு புதிய சமுதாயத்தைப் படைக்கவே இயேசு தன்னை அர்ப்பணித்தார்.

இயேசு தன்னுடைய மூன்றாண்டு காலப் பணி வாழ்வில் தன்னோடு இணைத்துக்கொண்ட பன்னிரு திருத்தூதுர்களோடு இறுதி இராவுணவை உட்கொண்டார். இயேசுவைக் காட்டி கொடுக்குமாறு சீமோனின் மகனாகிய யூதாஸ் இஸ்காரியோத்தை முன்கூட்டியே தீய ஆவி தூண்டியிருந்தது.

நண்பர் என்ற சொல்லுக்கு அர்த்தங்கள் ஆயிரம். நாம் இயேசுவை மறுதலித்தாலும், அவரைப் விட்டுப் பிரிந்தாலும் அவர் நம்மை வெறுப்பதில்லை. மாறாக அவர் நம்மை என்றும் தம் குழந்தையாகவே பார்க்கின்றார். வழி நடத்துகின்றார். பாதம் கழுவும் பணிவிடை , பணி புரியவல்ல பணிவிடை செய்யவே இறைமகன் இயேசு தம் சீடரின் பாதங்களை கழுவி, தன்னையே தாழ்த்தி தன் சீடர்களுக்கு பணிவிடை செய்கிறார். இதன் மூலமாக தாழ்ச்சியை கற்றுத் தருகிறார் இயேசு. இன்று தேவையில் இருப்போருக்கு பணிவிடை செய்ய நாம் தயாரா?

மற்றும் குருத்துவத்தை ஏற்படுத்திய நாளாகும். இன்று குருத்துவத்திற்காக அழைப்பு நிலைகள் அருகி வருகின்றன. சுகபோக வாழ்வை மறுத்து இறை-வனுக்கு சேவை செய்யக்கூடிய அருள் பணியாளர்கள் அருள் சகோதரிகள் இன்று நமக்குத் தேவை. அத்தோடு குருத்துவத்தை ஏற்படுத்திய இந்நாளில் குருத்துவ அழைப்பிற்காக விசேட விதமாக மன்றாடுவோம். இளைய தலைமுறையினர் இன்றைய நவீன காலத்தின் சூழமைவில் இருந்து வெளிப்பட்டு பணிவாழ்விற்கு தங்களை அர்ப்பணித்து வாழ மன்றாடுவோம்.

### சிந்தனைக்கு

இயேசுவின் தாழ்மையான
அன்பு செயல் அவர் உலக
மக்களுக்காக சிலுவையில் பலியாகி
எல்லோருக்கும் மீட்பு அளித்ததை
அடையாளப்படுத்துகின்றது.

## நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டியுள்ளேன்



அழுக்காக இருக்கும் பாதங்களைக் கழுவுவது அன்பின் அறிகுறிதான் (யோவான் 13:1-15). பசியாயிருப்பவர்களுக்கு உண்ண உணவும், குடிக்கப் பானமும் தருவது அன்பின் அறிகுறிதானே. இறையன்பைப் பிறருக்கு பகிர்ந்தளிக்கும் குருத்துவத்தைக் கொடுப்பதும், அன்பின் அறிகுறிதானே.

இயேசு அன்புக்கு இலக்கணம் வகுத்த நாள் புனித வியாழன் “நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டியுள்ளேன்” “நான் செய்தது போலவே நீங்களும் செய்யுங்கள்” அதாவது பிறரை அன்பு செய்ய சொல்லுகிறார்.

ஒரு குட்டிக் கதை

ஒரு நாள் வானதூதர் ஒருவர் பட்டணத்தில் வந்து இறங்கினார். அவரைச் சுற்றி ஒரே கூட்டம் அந்த வானதூதர் அங்கே கூடியிருந்தவர்களைப் பார்த்து “நான் வேற்றுக் கிரகத்திலிருந்து வந்திருக்கின்றேன். பாலும் தேனும் ஓடும் அதிசய உலகம் அது. அங்கே துன்பம் இருக்காது, துயரம் இருக்காது அங்கே உங்களை அழைத்துச் செல்ல வந்திருக்கின்றேன். என் சிறகுகளில் நான்கு பேரை சுமந்து அங்கே செல்ல விரும்புகின்றேன். யாராவது நான்கு பேர் வாருங்கள்” என்றார்.

அந்தக் கூட்டத்திலிருந்து பெரிய பணக்காரன் அவன் செல்வாக்கைப் பயன்படுத்தி சிறகின் மீது ஏறி அமர்ந்து கொண்டான். ஏறியதும் கையிலே கட்டியிருந்த தங்கக் கடிகாரத்தை எடுத்து எறிந்து விட்டு ஒரு பழைய கடிகாரத்தைக் கட்டிக்கொண்டான். வானதூதர் **‘பற்றற்ற உன் நிலை கண்டு உன்னைப் பாராட்டுகின்றேன்’** என்றான். அதற்கு அந்த பணக்காரன். ஐயோ அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அந்தக் கடிகாரத்துக்குள்ளே தான் சுவிஸ் பேங்க் கணக்கு இருக்கின்றது” என்றான்.
இரண்டாமவர் ஓர் இளைஞர் அவன் கையிலிருந்தது காதலிக்கு எழுதிய கடிதம்.
மூன்றாமவர் ஒரு தாத்தா அவர் கையில் இருந்தது மருந்து பேக் நான்காவதாக ஏற விரும்பினாள் ஒரு சிறுமி. அவள் கையிலே ஒரு நாய்க்குட்டி. வானதூதர் அந்த சிறுமியைப் பார்த்து ஒரு இடம் தான் இருக்கிறது என்றார். அதைக் கேட்டதும் அந்த சிறுமி, அப்படியானால் என் நாய்க்குட்டியை கொண்டு போங்கள். நான் வரவில்லை என்றாள் சிறுமி. அதைக் கேட்டதும் அந்த வானதூதரின் சிறகுகள் சிலிர்த்தன. அந்த சிலிர்ப்பில் சிறகுகள் மீதிருந்த மூன்று பேரும் கீழே விழுந்தனர். அந்த சிறுமியையும் நாய்க்குட்டியையும் சுமந்து கொண்டு வானதூதர் மேலே பறந்தார்.

வாழ்வை இனிதாக்குவது அன்பு
வாழ்க்கையை சுவையாக்குவது அன்பு
அழகற்றதை அழகாக்குவது அன்பு
கசப்பானதை இனிப்பாக்குவது அன்பு
தடுமாற்றத்தை அமைதியாக
மாற்றுவது அன்பு
எல்லாவற்றையும அள்ளிக்
கொடுப்பதும் அன்பு
எதிர் நோக்கைவிட உயர்ந்தது அன்பு
நம்பிக்கையை விட சிறந்தது அன்பு
கைமாறு கேட்காதது அன்பு
இமயத்தைத் தொட வைப்பது அன்பு
இறைவனை அடைய வைப்பது அன்பு

இப்படிப்பட்ட அன்பு
கேட்பவர்களுக்கு
இறைவனால் அருளப்படும்

**நாம் அன்பு செய்தால் நாம்
உயரமான இடத்திற்கு வளமும்,
நிலமும் நிறைந்த புதிய பூமிக்கு
அழைத்துச் செல்லப்படுவோம்.**









இறைமகன் தூய ஆவியால் கருத்தரித்து கன்னி மரியிடம் மறுஉரு எடுத்து மாட்டுக் கொட்டிலில் பிறந்தார். சூசை - அன்னை மரியின் மகனாகப் பெற்றோருக்குப் பணிந்த பிள்ளையாக, ஏழைத் தந்தையின் தச்சுத் தொழிலில் உதவியாக, ஞானத்திலும், அறிவிலும் பெரியவராக வளர்ந்தார். முப்பது வயதுக்கு மேல் இறைவார்த்தையை மக்களுக்குப் போதித்தார். பாவிகளை மன்னித்தார், மனந்திருப்பினார். நோய்களைக் குணமாக்கினார், பேய்களை ஓட்டினார், இறந்தோரை உயிர்ப்பித்தார். மக்கள் கூட்டம் அவரைச் சுற்றி அலைமோதியது.

ஆனால் அவர் சிலுவை மரணம் என்ற தண்டனை பெற்றதும், அனைவரும் அவரைவிட்டு ஓடினர். எப்போதும் உடனிருந்த சீடர்கள் கூட அவரைப் பிரிந்தனர். தாயிடம் சொல்லக்கூட நேரம் இல்லை. தவித்த வாய்க்கு தண்ணீர் கொடுக்க ஆளில்லை. கட்டாயத்தினால் தோள் சுமை பகிரப்பட்டது. அவல நிலையில் சிலுவையில் தொங்கவிட்டனர். உலகைப் படைத்த கடவுள் விண்ணுக்கும் மண்ணுக்குமாக அந்தரத்தில் தொங்கினார். அவரை அடக்கம் செய்த கல்லறை கூட அவருக்கு சொந்தமில்லை. இங்ஙனம் ஏழ்மை, அவலம், துன்பம், வலி என்று வாழ்ந்து மடிந்த அந்த கல்லறை நாயகன் இன்று அனைத்து மக்களின் நம்பிக்கை ஒளி. இவை யாவற்றையும் நாம் அறிந்திருக்கிறோம், வாசித்திருக்கின்றோம். எனினும் கல்வாரிக் கடவுளின் மறு பக்கம்தான் என்ன?

### மனிதனின் பார்வை

மனிதனின் பார்வையில் சிலுவை ஓர் அவமானச் சின்னம். பாவிகளின் அடையாளம். வெறுப்புக்குரிய ஒரு பொருள். ஆனால் மனிதனாய் உருவெடுத்த இறைமகன் பாவிகளை நேசித்தார். நோய்களைக் குணமாக்கினார். நம் பாவங்களுக்காக தம்மைச் சிலுவைச் சாவுக்கு கையளித்து தம் உயிரையும் கொடுத்தார். அவமானத்தின் சின்னமாகக் கருதப்பட்டச் சிலுவையை வெற்றியின் சின்னமாக மாற்றினார். நம்மை விண்ணகத்திற்குத் தகுதியுள்ளவராக்கினார்.

இறைமகன் ஒரு வார்த்தையினால் நம்மை மீட்டிருக்கலாமே ஆனால் ஏன் இத்தகு அவல நிலையையும், அவமானத்தையும் ஏற்று துன்ப நிலைக்கு ஆளானார்? பாவத்தின் கொடூரத்தையும், கனாகனத்தையும், தண்டனையையும் மனிதனுக்கு உணர வைக்கவே இத்தகு கொடூர சிலுவைச் சாவு. ஆனாலும் பாவத்திற்கான தண்டனையைப் பற்றி மனிதன் உணர்கின்றானா?

“எனக்காக இறைவா எனக்காக உயிர்தர வந்தீர் எனக்காக” என்று பாடி பாடியே ஆண்டுகள் பல கழித்துவிட்டோம். ஆனால் எமது பாவச் சேற்றிலிருந்து மீண்டு வர முயற்சிக்கின்றோமா?

### தவக்காலம் உணர்த்துவது

செபம், தவம் தானம் என்று நாற்பது நாட்களைத் தவறாமல் கழிக்க விரும்பும் நாம், சிலுவைப் பாதைகளையும், தவக்கால முயற்சிகளையும் கடைமையெனவே கடைப்பிடிக்கின்றோம். ஆனால் வெளிமாற்றத்தையே நாம் தவக்காலங்களில் செயல்படுத்துகிறோமே அன்றி எமது உள்மன பாவச் சுமையை, பாவக் கொள்கைகளை விட்டு வெளியே வர முடிகிறதா? சிந்திப்போம்.

புனித வாரத்தில் காலடி வைத்திருக்கும் நாம் இயேசுவே உம்மோடு சிலுவையைச் சுமக்க நானும் தயார் என்று எனக்கு கூற முடியுமா?

### கல்வாரிக் கடவுளின் வார்த்தைகள்

மகனே, மகளே, நான் உனக்காகச் சிலுவை சுமந்தேன் என்று மார்தட்டிக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் என் கல்வாரிப் பாதையைப் பார் இரத்தம் கசியும் எனது காயங்களைப் பார். தாகத்தோடு இருக்கும் என் நாவைப் பார், இரத்தம் வடிந்தோடிக் கொண்டிருக்கும் என் முழு உடலையும் பார். மனம்மாறு நான் உனக்கு என் சிலுவையை சுமக்க அழைக்கவில்லை. மாறாக, உன் அருகில் இருக்கும“ உன் சகோதரனின் சிலுவையை சுமக்க வருவாயா? சுமந்தாயானால் நீ என்னோடு இருப்பாய்.




- இந்த உலகத்திலே வாழ்ந்து கொண்டு உலகம் தரும் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் விரும்பாதவர்.
- இவர் எல்லா குடும்பங்களின் உறுப்பினர். ஆனால், யாருக்கும் சொந்தமானவர் கிடையாது.
- அனைவரின் துன்பத்தையும் பங்கு போடுபவர், எல்லாருடைய காயங்களுக்கும் மருந்தாக இருப்பவர்.
- அன்புப் பணியிலே எரியும் வாளாக இருப்பவர். கற்பு என்ற புண்ணியத்தின் மூலம் கடவுளுக்கு மிகவும் நெருக்கமானவர்.
- இவர் இயேசுவின் மறுஉருவாக இருந்துகொண்டு தேற்றுபவர், மன்னிப்பவர், எப்பொழுதும் ஆசீர்வதிப்பவர்.

பெரிய வியாழனன்று இயேசு ஏற்படுத்திய குருத்துவத்தையும், குருத்துவத்தின் பணிகளையும், குருத்துவத்தின் தனித்தன்மை என்ன என்பதைம் சிந்திப்பது சாலச்சிறந்தது.

### குருத்துவத்தின் பணிகளும் நோக்கமும் :

- குருத்துவம் என்னும் திருவருட்சாதனத்தால் குருக்கள் அழியா முத்திரையுடன் திருப்பணி-யாளர்களாக ஆகின்றனர்.
- கிறிஸ்துவின் பெயரால் மக்களுக்குப் போதித்து மக்களைப் புனிதப்படுத்தி மக்களை வழிநடத்து-கின்றனர். இப்பணிகளை அவர்கள் கிறிஸ்துவின் பெயரால் செய்கின்றனர்.
- குருக்கள் மட்டுமே திருப்பலியில் அப்பத்தையும் இரசத்தையும் கிறிஸ்துவின் திருவுடலாகவும், திருஇரத்தமாகவும் மாற்ற முடியும்.
- குருக்கள் மட்டுமே ஒப்புரவு அருளடையாளத்தில் மக்களின் பாவங்களைப் போக்க முடியும்.

### இன்று இயேசு குருக்களுக்கு விடுக்கும் அழைப்பு:


விருந்தளிப்பவரின், வீட்டில் உள்ள வேலையாள் அல்லது அடிமை, விருந்தினரின் பாதங்களைக் கழுவுவது உண்டு. ஆனால் இங்குத் தெய்வத்திருமகன் தனது சீடர்கள் மூலமாக ஆண்டவர் குருக்களுக்கு விடுக்கும் செய்தி.

- பணிவிடை பெற அன்று பணிவிடை புரியவே வந்தேன் என்று கூறி குருக்களையும் பணிவிடை செய்யவே அழைக்கின்றார்.
- நான் உங்களுக்கு மாதிரிகை காட்டினேன். நான் செய்ததுபோல நீங்களும் செய்யுங்கள்” என்று இயேசு கூறுவதிலிருந்து குருக்களின் வாழ்வு வெறும் போதனையில் மட்டும் முடிந்துவிடாமல், வாழ்வில் தொடர வேண்டும் என்று கூறுகின்றார்.

### குருத்துவத்தின் தனித்தன்மை :

இன்றைய சூழலிலே குருக்கள் செய்து வரும் பணிகளைப் பொதுநிலையினர் செய்து வருவதால் பொது நிலையினருக்கும் குருக்களுக்குமுள்ள வேறுபாடு மங்கிக் கொண்டு வருகிறது. இவ்வாறு, சொல்வதால் குருக்களையும் பொதுநிலையினரையும் பிரித்து காட்ட அன்று, மாறாக, குருக்களின் தனிச்சிறப்பையும், தனித்தன்மையையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

- நான் ஏற்கனவே கூறியதுபோல குருக்கள் மட்டுமே அப்பத்தையும் இரசத்தையும் கிறிஸ்துவின் உடலாகவும், இரத்தமாகவும் மாற்ற முடியும். மேலும் ஒப்புரவு அருட்சாதனத்தைக் கொடுக்க முடியும்.
- நற்கருணை எவ்வாறு விசுவாசத்தின் மறைபொருளோ அவ்வாறே குருத்துவமும் விசுவாசத்தின் மறைபொருள். விசுவாசம் இன்றி குருத்துவத்தையோ, குருக்களையோ ஏற்க முடியாது.




- குருக்கள் கிறிஸ்துவின் பிரதிநிதிகள் இதை இயேசு மிகவும் தெளிவாக லூக்கா நற்செய்தியில் 10ம் அதிகாரம் 16ம் வசனத்தில் விளக்குகிறார். “உங்களுக்குச் செவிசாய்ப்பவர் எனக்குச் செவிசாய்க்கிறார். உங்களைப் புறக்கணிப்பவர் என்னைப் புறக்கணிக்கிறார். என்னைப் புறக்கணிப்பவர் என்னை அனுப்பியவரையே புறக்கணிக்கின்றார்.

இத்தனை சிறப்பு வாய்ந்த இந்தக் குருத்துவம் ஒரு சில வேளையில் களங்கப்படுவதையும் நாம் பார்க்கின்றோம். எனவே, இக்காலகட்டத்தில் ஒரு சில குருக்கள் திசை மாறி செல்வதைக் கண்டு நாம் அதிர்ச்சி அடையத் தேவையில்லை. ஏனென்றால் இயேசுவோடு இருந்த பன்னிரு சீடர்களில் ஒருவர் அவரைக் காட்டிக் கொடுத்தார். ஒருவர் மறுதலித்தார். மேலும், யோவானைத் தவிர மற்ற அனைவரும் அவரின் பாடுகளின்போது ஓடிப்போனார்கள். எனவே, குருத்துவ அழைத்தலை உதறிவிட்டு ஓடிப்போகும் குருக்களைப் பற்றிக் கடுமையாக விமர்சனம் செய்வதைவிட தங்கள் அழைத்தலில் நிலைத்து நிற்கும் குருக்களுக்காகக் கடவுளுக்கு நன்றி கூறுவோம். இந்த அருமையான நாளிலே நாம் அனைவரும் நினைவுகூற வேண்டியது இயேசுவின் செபம். “தந்தையே! என் சீடர்களை உலகிலிருந்து எடுத்துவிட வேண்டாம் என்று வேண்டவில்லை. தீயோனிடமிருந்து அவர்களை காத்தருள வேண்டுமென்று வேண்டுகின்றேன். (யோவா 17:15). ஆகவே, நாம் குருக்களைத் தனிப்பட்ட முறையிலும், குடும்பச் செபத்திலும் நினைவுகூற வேண்டியது நம் கடமை. எனவே குருக்களுக்காகச் செபிப்போம்.









## சிலுவையில் தொங்கி கொண்டிருந்த இயேசுவை நோக்கி சொல்லப்பட்ட வார்த்தைகள் :

1. “கோவிலை இடித்து மூன்று நாளில் கட்டி எழுப்புகிறவனே, உன்னையே விடுவித்துக்கொள். நீ இறைமகன் என்றால் சிலுவையிலிருந்து இறங்கி வா” (மத் 27:39-40)

2. “நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று” (லூக் 23:39) என்றான் தீய கள்வன்.

3. “இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்” (லூக் 23:42) என்றான் நல்ல கள்வன்.

4. “பிறரை விடுவித்தான், தன்னையே விடுவிக்க இயலவில்லை. இவன் இஸ்ரயேலுக்கு அரசனாம்! இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும். அப்பொழுது நாங்கள் இவனை நம்புவோம். கடவுளிடம் இவன் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தானாம்! அவர் விரும்பினால் இப்போது இவனை விடுவிக்கட்டும். ‘நான் இறைமகன்’ என்றானே” என்றார்கள். தலைமைக் குருக்கள், மறை-நூல் அறிஞர்கள் மற்றும் மூப்பர்கள் (மத் 27:42-43)


5. “இதோ! இவன் எலியாவைக் கூப்பிடுகிறான்” என்றும் “பொறுங்கள், எலியா இவனைக் கீழே இறக்க வருவாரா?, பார்ப்போம்” (மாற் 15:36) என்றனர் சூழ நின்று கொண்டிருந்தவர்கள்.

6. “நீ யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக் கொள்” (லூக் 23:36-37) என்று படைவீரர்கள் எள்ளி நகையாடினர்.

7. “இம்மனிதர் உண்மையாகவே இறைமகன்” (மாற் 15:39) என்றான் நூற்றுவத் தலைவன்.

இப்படி எல்லா சொற்களைக் கேட்ட இயேசுவின் சிலுவை மரணப் பயணம்........ நம்மை யோசிக்கச் சொல்லுகிறது. உங்கள் பேச்சு, உரையாடல், விமர்சனம் எப்படி இருக்கிறது?

# சிலுவை மரம்



சிலுவை மரம் இயேசு சுமந்த மரம். இயேசு இரத்தம் சிந்திய சிவந்த மரம். இந்த மரத்தில் காய்ப்பில்லை, பூப்பும் இல்லை, புனித மகனால் புனிதம் பெற்ற மரம்.

சீனக் கவிஞன் ஒருவன் குடையிடம் பேச்சுக் கொடுத்தான். “குடையே உனக்கு வெயிலில் காய்வது பிடிக்குமா? மழையில் நனைவது பிடிக்குமா?” குடை சொன்னது. “நான் வெயிலில் காய்ந்தாலும் பரவாயில்லை, மழையில் நனைந்தாலும் பரவாயில்லை எனது நிழலில் வருவோர் நனையாமல், காயாமல் இருக்க வேண்டும்” என்று கூறியதாம்.

இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தால், அமைதியை நிலைநாட்டியும், விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் தம்மோடு ஒப்புரவாக்க இயேசு சிலுவை மரத்தை ஏற்றுக்கொண்டார்.

- ✝ சிலுவை மரம் பாவிகளுக்காக பாடுபட்ட இதயத்தின் சாட்சி
- ✝ சிலுவை மரம் மீட்பின் வாசல் - மானிடருக்காக திறந்ததின் சாட்சி
- ✝ சிலுவை மரம் இறையன்பு
- ✝ சிலுவை மரம் உண்மையான நம்பிக்கையின் வழி

இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்த-தினாலேயே மகிமை பெற்றது சிலுவை. சிலுவை வழியாக மீட்பின் வழியைத் திறந்து வைத்துள்ளார்.

## இந்த சிலுவை மரம் நமக்கு கொடுக்கும் செய்தி தான் என்ன?

இயேசு கிறிஸ்துவின் அன்பின் ஆழம், அகிலம், நீளம், உயரம் என்னவென்று உணர வேண்டுமா? சிலுவையோடு பேசுங்கள். அது சொல்லும் இயேசுவின் அளவற்ற அன்பை (மத் 11:28)

பெரும் சுமை சுமந்து சோர்ந்து இருப்பவர்களே! எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். எனவே பவுலடியார் கூறுகின்றார். கலா 6:14, “நானே ஆண்டவர்” இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்று வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்ட மாட்டேன்.

### செய்தி

1. சிலுவை மரம் இயேசுவின் வல்லமையை நமக்கு எடுத்துக் கூறுகிறது. (1கொரி 1:18) சிலுவையைப் பற்றிய செய்தி அழிந்து போகின்றவர்களுக்கு மடமையே! ஆனால் மீட்பு பெறும் நமக்கோ கடவுளின் வல்லமை.

2. சிலுவை வழியாக நாம் மீட்பு பெற்றிருக்கின்றோம். 1கொரி 7:23 நீங்கள் ஆண்டவரால் விலைகொடுத்து மீட்கப்பட்டீர்கள். எபேசி 1:5 கிறிஸ்து இரத்தம் சிந்தி தம் அருள் வளத்திற்கு ஏற்ப நமக்கு மீட்பு அளித்துள்ளார். இம் மீட்பால் குற்றங்களில் இருந்து நாம் மன்னிப்பு பெறுகின்றோம்.

3. மனிதர்கள் முகம் பாவத்தினால் மூடப்பட்டிருக்கிறது. சிலுவை வழியாக பாவ முத்திரை அகற்றப்பட்டது. 2கொரி 3:14 உங்களை விடுவிக்க கொடுக்கப்பட்ட விலை உங்களுக்கு தெரியும் கலா 1:11 நம்முடைய பாவங்களின் பொருட்டு தம்மையே சிலுவையில் ஒப்புவித்தார். எபே 1:7 இரத்தம் சிந்தி நமக்கு மீட்பு அளித்துள்ளார். இம்மீட்பால் குற்றங்களிலிருந்து நாம் பாவ மன்னிப்பு பெறுகின்றோம்.

4. கடவுளோடு ஒப்புரவாக்க சிலுவையைத் தவிர வேறு எதுவும் இல்லை. 2கொரி 5:21 நாம் கிறிஸ்து வழியாக தமக்கு ஏற்புடையவராகுமாறு கடவுள் பாவம் அறியாத அவரை சிலுவையை ஏற்கச் செய்தார். எபே 2:16 சிலுவை வழிபாடு இரு இனத்தவரையும் ஓர் உடலாக்கி கடவுளோடு ஒப்புரவாக்க. இப்படிச் செய்தார்.

5. சிலுவை வழியாக நமக்கு வெற்றி கிடைத்தது. 1கொரி 15:54, சாவு முற்றிலும் ஒழிந்தது. சாவே உன் வெற்றி எங்கே! சாவே உன் கொடுக்கு எங்கே 1கொரி 15:57 நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வழியாக நமக்கு இந்த வெற்றிக் கிடைத்தது. சிலுவையினால் கிடைத்த வெற்றியால் ஆட்சியாளர் அதிகாரம்கொண்டோர், படைக் கலன்களை பிடுங்கிக் கொண்டு அவர்களை இகழ்ச்சிக்குள்ளாக்குமாறு செய்தார்.

6. சிலுவை வழியாக ஆறுதல் பெறுகின்றோம் 2கொரி 1:5 கிறிஸ்து நமக்காக மிகுதியாக துன்புற்றார். அதுபோல அவர் வழியாக நாம் மிகுதியாக ஆறுதல் பெறுகின்றோம்.

7. சிலுவை வழியாக வல்லமை கிடைக்கிறது. 2கொரி 13:4 இயேசு வலுவற்றவராய் சிலுவையில் அறையப்பட்டார். ஆனால் கடவுளின் வல்லமையால் உயிர்த்தெழுந்தார். கடவுளின் வல்லமையை அளிக்கிறார்.

8. சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து மீட்பு அளிக்கிறார். விடுதலை தருகின்றார் கொலா 2:14

9. கீழ்ப்படிதலைக் கற்றுத் தருகின்றார் எபி 5:8 அவர் இறைமகனாயிருந்தும் துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார். அவர் நிறைவுள்ளவராக்கி நமக்கு கீழ்ப்பட்டோர் அனைவரும் என்றென்றும் மீட்படைய காரணமானார்.

10. மனித உள்ளத்திற்காக ஏங்குகின்றார் யாக் 4:5 மனித உள்ளத்திற்காக கடவுள் பேராவலோடு ஏங்குகின்றார். அதற்கு அவர் அளிக்கும் அருளே மேலானது. எரே 31:20உனக்காக என் இதயம் ஏங்கித் தவிக்கின்றது. 1 யோவா 2:12 ஒருவர் பாவம் செய்ய நேர்ந்தால் நமக்காக தந்தையிடம் பரிந்து பேசுகிறார். அவரே இயேசுக்கிறிஸ்து நம் பாவங்களுக்காக கழுவாய் அவரே, நம் பாவங்களுக்கு மட்டுமல்ல, அனைத்துலகின் பாவங்களுக்காய் கழுவாய் அவரே!

ஆகவே சிலுவை மரம் கடவுளின் தியாகத்தையும், பாவங்களை மன்னிக்கும் இடமாகவும் இறைவனின் அருளை பெற்றுக் கொடுக்கும் இல்லமாகவும் இருக்கிற்து. எனவே சிலுவையின்றி வேறெதையும் பெருமை பாராட்டாமல் இப்பரிசுத்த வாரத்தில் சிலுவை பற்றி தியானிப்போம். மத் 10:38 இன்படி தம் சிலுவையை சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர் லூக் 9:23 என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள் தோறும் தூக்கிக் கொண்டு என்னை பின்பற்றட்டும்.




## ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு (09.04.2017)

**வாசக விளக்கம்:** இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்னும் முப்பெரும் மறை உண்மைகளை விளக்கும் பரிசுத்த வாரத்தில் கால்பதிக்க குருத்தோலைப் பவனியாக ஆலயம் நுழைந்த அன்பு நெஞ்சங்களே! இன்றைய இறைவார்த்தைகள் மகிழ்ச்சி, நம்பிக்கை, கீழ்ப்படிதல் என்ற சொற்களின் மகத்துவத்தை எமக்கு எடுத்துரைக்கின்றன. தனக்கு என்ன நிகழப்போகின்றது என்பதை தெரிந்தும், அறிந்தும், உணர்ந்தும், இருந்த இயேசு, ஜெருசலேம் நோக்கிப் பயணிக்கின்றார். இதற்குக் காரணம் தந்தை மீது இருந்த நம்பிக்கையும், அவரது திட்டத்தை நிறைவேற்றுவதில் இருந்த ஆர்வமும் தான். நீங்கள் எல்லாம் என்னை விட்டுப் போனாலும் தந்தை என்னோடு இருப்பார் என இயேசு நம்பினார். இறைவனுக்கு இணையாக இருந்தாலும் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று தாழ்த்திக் கொண்டார் இயேசு. இன்று எமது வாழ்வில் வரும் துன்பங்களை நாம் எந்த மனநிலையோடு ஏற்றுக்கொள்கின்றோம். இயேசுவின் எருசலேம் நோக்கிய பயணம் கடல் மணல் மேல் நடக்கும் இதமான பயணம் அல்ல, அவருடைய பாதை மலர்களால் அலங்கரிக்கப்பட்டதல்ல, மாறாக கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதை இத்தகைய பாதையில் பக்தியோடு பயணம் செய்ய இன்று நாம் அழைக்கப்படுகின்றோம். எனவே நாமும் நம்பிக்கையுடையவர்களாக எமது வாழ்வு என்னும் எருசலேமை நோக்கி மகிழ்வுடன் பயணிக்க பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : எசா 50: 4-7**
நிந்தனை செய்வோர்க்கு என் முகத்தை மறைக்கவில்லை. இழி நிலையை நான் அடைவதில்லை என்று அறிவிப்பேன்.

**பதிலுரைப் பாடல் :** என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்

**இரண்டாம் வாசகம் : பிலி 2:6-11**
கிறிஸ்து தம்மையே தாழ்த்திக் கொண்டார் எனவே கடவுளும் கிறிஸ்துவை உயர்த்தினார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

**நற்செய்தி வாசகம் : மத் 26:14-27:66**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

என் பிணிகளை தாங்க எம் நோய்களை சுமந்து கொண்ட இயேசுவைப் பின்பற்றி வாழும் திருச்சபையையும் எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் மக்களின் நல்வாழ்விற்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்திடத் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டில் தீச்செயல்களும் மனித மாண்பிற்கு விரோதமான செயல்பாடுகள் நீங்கி எங்கும் மகிழ்ச்சியும் தன் நம்பிக்கையும் வளரவும், தீச்செயல்களைப் புரிவோர் மனம் திருந்தி நற்செயல்கள் புரியவும் தீமையை வெறுத்து நன்மையை ஏற்று நாட்டிற்கும், சமூகத்திற்கும் பயன்கொடுக்கும் வாழ்வை வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

இயேசுவின் எருசலேம் நோக்கிய பயணம் கடல் மணல் மேல் நடக்கும் இதமான பயணமல்ல, கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பயணம் இதை உணர்ந்தவர்களாக பரிசுத்த வாரத்தை தொடங்கும் நாமும் எமது மனமாற்றத்தின் வழியாக இயேசுவின் உயிர்ப்பின் சக்திகளாக மாறிட வேண்டிய வரங்களை எமக்குத் தந்தருள வேண்டுமென்று....

## ஆண்டவரின் உயிர்ப்பு ஞாயிறு (16.04.2017)

**வாசக விளக்கம்:** மண்ணில் விதைகள் என்றுமே புதைக்கப்படுவதில்லை. அவை விதைக்கப்படுகின்றன. இதோ இயேசு என்ற ஒரு வைர விதையை விதைத்துப் போனார்கள். அது இன்று மண்ணைக் கிழித்துக் கொண்டு உயிர்த்து நிற்கிறது. ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவில் மகிழ்வுடன் கலந்து கொள்ள வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே! ஆண்டவர் இயேசுவினுடைய உயிர்ப்பு விழாவானது ஒரு விசுவாசப் பெருவிழா. கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையென்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருந்த விசுவாசமும் பொருளற்றுப் போயிருக்கும். இயேசு உயிர்த்து விட்டார் என்று நம்பியதை இன்றைய நற்செய்தி எடுத்துக்காட்டுகின்றது. காலியான கல்லறை, போர்த்தியிருந்த துணிகள் ஆதாரமாக உள்ளன. இயேசுவினுடைய உயிர்ப்பானது எமது விசுவாசத்தை ஆழப்படுத்துகின்றது. இறைமகன் இயேசுவின் உயிர்ப்பு நம் உயிர்ப்பின் முன் அடையாளம். நாம் இறப்பில் இருந்து உயிர்ப்பை அடைவோம் என்ற நம்பிக்கையைத் தருகின்றது. இன்றைய நற்செய்தியில் நாம் பார்க்கின்ற கல்லறை வெற்றுக்கல்லறை அல்ல மாறாக பாவத்தை வென்று உயிர்த்தார் என்ற வெற்றியின் கருவறை. இயேசுவின் உயிர்ப்பு அறிந்து கொள்ள தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றல்ல மாறாக அனுபவித்து வாழப்பட வேண்டிய ஒன்று. நாமும் சீடர்களைப் போன்று இயேசுவின் உயிர்ப்பிற்கு சாட்சிகளாக மாறிட மகிழ்வுடன் பலியில் பங்கேற்போம்.

**முதல் வாசகம் : தி.ப 10:34,37-43**
இறந்த இயேசு உயிர்த்தெழுந்த பின்பு, அவரோடு உண்டு குடித்த நாங்களே இதற்குச் சாட்சிகள்.

**பதிலுரைப் பாடல் :** ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே. இன்று அக்களிப்போம் அகமகிழ்வோம்

**இரண்டாம் வாசகம் : கொலோ 3:1-4**
மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள் அங்கு கிறிஸ்து அமர்ந்திருக்கிறார்

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா நம் பாஸ்கா ஆடாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறார். ஆகையால் நாம் ஆண்டவரின் பாஸ்காவை கொண்டாடுவோமாக அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவான் 20 : 1-9**

### விசுவாசிகளின் மன்றாட்டு

தந்தை இறைவனே தந்தை இறைவனே எம்
மன்றாட்டை கேட்டருளும் தந்தை இறைவனே

உயிர்த்த இயேசுவில் நம்பிக்கை கொண்டு வாழும் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அகிய அனைவரும் என்றும் விசுவாசத்தில் நிலைத்து மக்களை விசுவாச வாழ்வில் வழிநடத்தத் தேவையான அருள்வரங்களை தந்தருள தந்தையே உம்மை வேண்டுகின்றோம்.

இறைமகன் இயேசுவின் உயிர்ப்பு நம் உயிர்ப்பின் முன் அடையாளம். ஆண்டவரின் இறுதி நாளில் நாமும் இயேசுவைப்போல் உயிர்ப்போம் என்ற நம்பிக்கையை தருகின்றது. இதை விசுவசிப்பவர்களாக நாம் வாழவும் எமது இவ்வுலக வாழ்வு முடியும்வரை நாமும் உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக வாழ வேண்டிய அருள் வரங்களைத் தந்தருள வேண்டுமென்று தந்தையே உம்மை வேண்டுகின்றோம்.

நீர் உருவாக்கிய இந்தப் பூமியில் நாளும் காணும் வன்முறை போர்,கலவரம் யாவும் அகன்று மனிதர்கள் யாவரும் அமைதியின் தூதர்களாக வலம் வரவும் உலக மக்கள் யாவரும் செய்யும் தொழிலால், பேசும் மொழியால் சேர்த்துள்ள செல்வத்தால், பிறப்பால் வளர்ப்பால், உயர்வு தாழ்வு பார்க்கும் மனநிலையை அகற்றி அனைவரும் சமன் என்ற உணர்வுடன் வாழ வரமருள வேண்டுமென்று தந்தையே உம்மை வேண்டுமென்று....

# அன்பின் வெளிப்பாடுகள்

பரப்பரப்பான பேருந்து நிலையம். வயதானப் பெண் ஒவ்வொருவரிடமும் **'பெரிய ஆஸ்பத்திரிக்கு போவதற்கு வழி தெரியவில்லை எந்த வழியில் போக வேண்டும்'** என்று கேட்க **'ஒவ்வொருவரும் நேரமில்லை வேறு ஆளைப் பாரு' மனுசனுக்கு ஆயிரம் டென்ஷன் இதுள வேற இவ'** என்று அனுப்பினார்களே தவிர, யாரும் அந்த மூதாட்டிக்கு உதவ முன்வரவில்லை. ஒரு குறிப்பிட்ட மனிதரிடம் கேட்டபோது அவர் அவள் மீது அதிகமாகவே எரிந்து விழுந்து தான் பெரிய இடத்தில் வேலை செய்பவன் எனக் கூறி அவளை விரட்டினான். அந்த முதியவள் அகன்றுப் போனார். அந்த நேரம் அந்த மனிதனின் கைபேசி ஒலித்தது மறுமுனையிலிருந்து **"தம்பி நான் தான் உன் முதலாளி பேசுறேன். உன் மகள் பாடசாலைக்கு செல்லும் போது வாகனத்தில் அடிப்பட்டு இருக்கிறாள். நான் அவளை தூக்கிச் சென்று டொக்டரிடம் காட்டி மருந்து போட்டு வீட்டில் சென்று விட்டேன்' நீ பதற வேண்டாம். வேலைக்குப் போய் வேலையை கவனி. நான் கொஞ்ச நேரத்தில் வந்து விடுகிறேன்.** என்றார். அந்த மனிதருக்கு எங்கோ பொறி தட்டியது. முதியவருக்கு உதவிட அவளைத் தேடினான். ஆனால் அவளை காணவில்லை.

ஆம். நாம் உதவக் கூடிய சின்ன சின்ன சந்தர்ப்பங்களை நழுவ விடக் கூடாது. சின்ன சின்ன உதவிகள் செய்தாலே போதும் இயேசு என்னோடு இருப்பார்.

**நற்செயல் புரிந்திடும் துறவு கொள்பவன். நாள்தோறும் வெற்றியே காண்பான்.**








அமைதி ஓர் ஆழ்ந்த சமுத்திரம்
நான் அதில் ஒரு துளியாக மாற வேண்டும்
அமைதி ஒரு பரந்த வானம்
நான் அதில் ஒரு முகிலாக மாற வேண்டும்
அமைதி ஒரு பிரகாசமான சூரியன்
நான் அதில் ஒரு கதிராக மாற வேண்டும்
அமைதி ஒரு அழகிய மலர்
நான் அதில் ஒரு இதழாக மாற வேண்டும்
அமைதி ஒரு உயர்ந்த மரம்
நான் அதில் ஒரு நற்சுவை பழமாக மாற வேண்டும்
அமைதி ஒரு நித்திய வாழ்வின் சின்னம்
அன்பன் இயேசு அமைதியை வழங்க மரணத்தை
வென்று உயிர்த்துவிட்டார்
அல்லேலூயா அல்லேலூயா
என் வாழ்க்கைப் பயணத்தை விண்நோக்கி
பயணிக்க உயிர்த்த இயேசு வரமருள்வார்

*அருட்சகோதரி பற்றிமா நாயகி அ.கா*




பயணத்தின் பாதையில்
தடம் பதித்த உன் பாதம்
பாதை மாறிச் செல்லாத
உன் பயணம் ~ சுவடுகளில்
கண்ட உன் பாதம் ~ இறைவா
எனக்கு வழியாய் மாறுதே...

சுமையைக் கண்ட தோள்கள்
சுமையைத் தாங்கிய கைகள்
சித்திரத்தில் கண்ட உன் முகம்
இறைவா எனக்கு
ஒளியாய் மாறுதே...


உம் செயல்கள் நிறைவேற
கல்லறைகள் விடைகொடுக்க
சுவட்டில் பெயர் பதிக்க...

மூன்றாம் நாள் மகிழ்வித்தீரே...

நீர் மறுபடியும் எழுந்துவிட்டது ~ என்
பாதையைச் சரிசெய்ய அல்லவா!
உன் பாதத்தைப் பதித்து விட்டது
உம் பாதையைப்
பின்பற்ற அல்லவோ!

உம் வாழ்வின் அனுபவங்கள் தானே
என் பாதையைத் தீர்மானிக்கின்றன

'பாதைகள்
பயணத்தைத்
தீர்மாணிக்கும்'



# சிலுவை அடியில்



இரவாகட்டும், பகலாகட்டும் எப்பொழுதெல்லாம், என்னைச் சுற்றி அமைதி தவழ்கிறதோ, நிம்மதி நிலவுகின்றதோ, அப்போதெல்லாம், எங்கிருந்தோ வரும் ஒரு சோகக் குரல் - துயரக் குரல் என்னை உலுக்குகிறது. முதன் முறையாகக் கேட்ட போது குரல் வந்த திசையை நோக்கிச் சென்றேன். குரலுக்குரியவரைத் தேடினேன். அக்குரல் சிலுவையில் இருந்து வந்தது. குரலுக்குரியவர் பாடுகளின் எல்லையிலேயே, வேதனையின் விளிம்பிலே மரச்சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தார்.

அருகே சென்று ‘இறக்கி விடுகிறேன்’ என சொல்லி கால்களில் துளைத்திருந்த ஆணிகளைக் கழற்ற முயன்றேன். ஆனால் அவரோ ‘விட்டு விடு, உன்னால் மட்டும் முடியாது. உலகிலுள்ள ஒவ்வொரு ஆணும், பெண்ணும், ஒவ்வொரு குழந்தையும் ஒன்று திரண்டு வந்தாலன்றி என்னைச் சிலுவையினின்று இறக்க முடியாது, என் வேதனையைக் குறைக்க முடியாது’ என்றார்.

உடனே நான் ‘உலகம் முழுவதும் என்றைக்கு உம் சிலுவையடிக்கு வரப்போகின்றது? உம் வேதனை தீரப்போகிறது? உலகம் கிடக்கட்டும் இதோ நான் இருக்கின்றேன். என்னால் ஏதாவது செய்ய முடியும் என்றால் சொல்லும்’ என்றேன் ‘அப்படியா’ அவர் சொன்னார் ‘முதலில் இந்த இடத்தை விட்டுப் போ, உலகெங்கும் போ, ஊர் ஊராகப் போ, உன்னைச் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் சொல் உனக்காக ஒரு மனிதன் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறார் என்று’

இது கற்பனை அன்று ஓர் ஆங்கிலக் கவிஞன் காவியமாக்கிய கடவுளின் சோகக் கதை. கல்வாரி என்பது என்றோ ஒரு நாள் நடந்து முடிந்த பழைய நிகழ்ச்சி அல்ல, இன்றும் ஒவ்வொரு மனித வாழ்விலும் நடந்துக் கொண்டிருக்கும், தெய்வத்தின் துயர நிகழ்ச்சி என்பன அழகாக சித்தரிக்கும் அற்புதமான கவிதை

உனக்காக, எனக்காக ஒவ்வொரு மனிதனுக்காக இதோ இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறார். வேதனையில் துடித்துக் கொண்டிருக்கிறார். ஏன் இந்த நிலை? வாய் திறந்து சொல்லும் நிலையில் அவர் இல்லை. அதோ இன்னும் துடித்துக் கொண்டிருக்கிறதே அந்த இதயத்தில் தலை சாய்த்து உற்றுக் கேள் பதில் சொல்லும்.

## அன்பு - பாவம் :

பாவம் அன்பு இவையே அனைத்திற்கும் காரணம்

1. பாவம் - அன்பு என்ற ஒன்று மட்டும் இல்லாதிருந்தால் என்றோ உலகை அழித்திருக்கக் கூடிய மனிதனின் பாவம்.

2. அன்பு - பாவத்தால் உலகம் அழிவதைப் பார்த்துச் சகிக்காத கடவுளின் அன்பு.

இந்த அன்புக்காக தான் நான் இங்கு தொங்குகின்றேன். அன்புக்கு இழைத்த பரிசு இது.


## சிலுவை

இந்த சிலுவையில் இருகைகள் விரித்த நிலையில் நான் இருப்பது ஏன் தெரியுமா?

அன்புக்கும், பாவத்திற்குமிடையே நடந்த போராட்டத்தின் விளைவு. ஆதியில் மனிதன் கடவுளோடு கைகோர்ந்து திரிந்தான். சந்தோஷமாக இருந்தான். பாவம் நுழைந்தது. அன்புறவு அறுந்தது. பிரிவு, பிளவு, பாவம் மலிய மலிய இடைவெளியும் விரிந்தது. கடவுளை விட்டு மனிதன் ஓடினான். ஓடினான் ஓடிக்கொண்டே இருந்தான். அவனைத் தடுத்து ஆட்கொள்ள கடவுள் துரத்தினார், துரத்தினார் துரத்திக் கொண்டே இருந்தார். மனிதனோ அழிவுக்கே சென்று விட்டான். பாவக்குழியில் புரண்டு நரகத்தில் விழப்போகும், மனிதனைத் தடுப்பதற்காகவே, நான் சிலுவையில் தொங்குகின்றேன். அதற்காகவே கைகள் விரித்து சிலுவையில் காத்திருக்கின்றேன் என்றார். ஆகவே மனிதனே விரித்த என் அன்புக் கைகளைச் சிலுவையில் அறைந்து விட்டு ஆணி கொண்டு பிளைந்து விட்டு கீழே குனிந்து தன் இசைவு சென்றான் மனிதன்.

ஆகவே இயேசுவின் மரணம் உனக்காகவும், எனக்காகவுமே, சிலுவையை உற்றுப் பார்ப்போம். இந்த புனித வெள்ளி மனித வரலாற்றில் பெரிய வெள்ளி. நாம் வாழ்வு பெறும் பொருட்டு அவர் இறந்தார்...

பக்கம் 15





# பாடுகளின் பாதையில் இயேசு அனுபவித்த துன்பங்கள்

## தம்மேனியில் சுமந்த துன்பங்கள்

இயேசுவை காவலர்கள் அடித்தார்கள், உதைத்தார்கள், அவர் முகத்தில் உமிழ்ந்தார்கள், முள்முடி சூட்டினார்கள், சிலுவையை அவர் மீது சுமத்தினார்கள், சிலுவையின் பாரத்தால் விழுந்தவர், எழுந்தார், நடந்தார், சிலுவையில் அறையப்பட்டார், ஈட்டியால் குத்தப்பட்டார்.

## தம் மனதில் ஏற்ற துன்பங்கள

தாம் நம்பிய சீடர்கள் தம்மைவிட்டு ஓடியது, இயேசுவை மரியாதை குறைவாக காவலர்கள் நடத்தினர், பொய் குற்றங்களை சாட்டினர். தவறே செய்யாதவர், தவறு செய்தவராக மக்களால் நம்பப்படுவது, நடத்தப்பட்டது மிகப் பெரிய மனவேதனை

## தாம் தனிமையில் கைவிடப்பட்டது

அன்பு சீடர்கள் அத்தனை பேரும் தம்மை தனியாக தவிக்கவிட்டு விட்டு ஓடிவிட்டனர். ஒரு சீடர் காட்டிக் கொடுத்தார். ஒருவர் மறுதலித்தார். ஒருவர் நன்மை பெற மக்களுக்கு சார்பாக பேசினார், ஏமாற்றம், பயம், திகில் மனக்கலக்கத்தை இயேசு தனிமையில் அனுபவித்தார்.



# இந்தப் புழுதியும் புத்துயிர் பெறும்

**அஸ்தமனம் சூரியனுக்கு வீழ்ச்சி அல்ல, கல்வாரி மரணம் இயேசுவுக்கு தோல்வி அல்ல, தோல்விக்குப் பிறகு வெற்றி எனக்காக இயேசுவைப் பெறுத்தவரை தோல்வியே வெற்றி**

வாழப்பிறந்தவர்கள் மனிதர்கள். இயேசு, சாவதற்கென்றே பிறந்தவர் அன்றோ. இயேசுவின் மரணம் தான் இயேசுவின் மனிதப் பிறப்பின் நோக்கம் என்றால் இலட்சியத்தின் நிறைவேற்றம் எப்படித் தோல்வியாக இருக்க முடியும். அந்த வெற்றிக்கு இறைவன் கொடுத்த வடிவம் தான் இயேசுவின் உயிர்ப்பு. இயேசுவின் உயிர்ப்பே அலகையின் மீதும், பாவத்தின் மீதும் அதன் விளைவான நோவு, சாவின் மீதும் கொண்ட வெற்றி. இது இயேசுவோடு மட்டும் முடிந்துவிட்டது என்றால் அது வரலாற்று நிகழ்வாகவே இருக்கும். இறைத்தந்தை இயேசுவில் பெற்ற வெற்றியை ஒவ்வொருவர் வாழ்விலும் காண வேண்டுமென்று விரும்புகிறார்.

நமது வாழ்விலும், நாம் சார்ந்த சமுதாயத்திலும் இயேசுவின் உயிர்ப்பு வெளிப்பட வேண்டும். இயேசுவின் உயிர்ப்பு எல்லா மக்களுக்கும் உயிரும் உயிர்ப்பும் ஆகும்.

1980ஆம் ஆண்டு பங்குனி 24ம் நாள் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்த எல்சால்வதோன் நாட்டுப் பேராயர் ஆஸ்கார் ரொமேரோ, தான் கொலை செய்யப்படு முன் சொன்னார் “இறப்பதற்கு நான் அஞ்சவில்லை. இறப்பது நானாக இருக்க உயிர்ப்பது சரித்திரமாகவும், சமுதாயமாகவும் இருக்கப் போகிறது என்று மகிழ்ச்சி அடைகின்றேன். “அவர்கள் என் உடலைக் கொல்ல முடியுமே தவிர என் குரலை அடக்கி விடமுடியாது” என்றார் அந்த பேராயார். ஆகவே இயேசுவின் உயிர்ப்பு நம்மிலும் சமுதாயத்திலும் வெளிப்படவேண்டும்.

கி.பி நான்காம் நூற்றாண்டு வரை திருச்சபை கொண்டாடிய ஒரே விழா உயிர்ப்பு விழாவாகும். இன்று நாம் நினைவு கூரும் விழாக்களில் முதன்மையானதும் முக்கியாமானது இயேசுவின் உயிர்ப்பு விழா. ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் இயேசு உயிர்ப்பதில்லை.

- ✠ சண்டையும், சச்சரவும் மறைந்து சமாதானம் பிறக்கின்ற போதெல்லாம் அங்கே இயேசு உயிர்க்கின்றார்.
- ✠ பகைமை மடிந்து அன்பும், அமைதியும் தளிர்க்கின்ற போதெல்லாம் அங்கே இயேசு உயிர்க்கின்றார்.
- ✠ அழுத ஏழையின் கவலை தீர்ந்து கண்ணீர் உலரும் போதெல்லாம் அங்கே இயேசு உயிர்க்கின்றார்.
- ✠ துன்புற்ற மக்கள் ஒன்று திரண்டு நம்பிக்கையோடு உரிமைக்குரல் உயர்த்தும் போதெல்லாம் வெற்றி வீரராய் அங்கே இயேசு உயிர்க்கின்றார்.

ஆகவே உயிர்த்த இயேசுவை மீண்டும் நம் பாவங்களால் இறக்கச் செய்யாமல், பார்த்துக் கொள்வோமா?

**உயிர்த்த இயேசுவின் நல்வாழ்த்துக்கள் அல்லேலுயா**

## இயேசு உயிர்த்து விட்டார், நமது வாழ்வுக்கும் உறுதி தந்துவிட்டார். இயேசுவின் உயிர்ப்பு நமக்கு

- ✶ பொய்யைவிட உண்மை மேலானது என்பதை இயேசுவின் உயிர்ப்பு எண்பிக்கிறது.
- ✶ தீமையை விட நன்மை உறுதியானது என்பதை இயேசுவின் உயிர்ப்பு எடுத்தியம்புகிறது.
- ✶ பகைமையை விட அன்பு, மன்னிப்பு உயர்ந்தது என்பதை இயேசுவின் உயிர்ப்பு உணர்த்துகின்றது.
- ✶ சாவை விட வாழ்வு சக்தியானது என்பதை இயேசுவின் உயிர்ப்பு உறுதி செய்கின்றது.

**இயேசுவின் உயிர்ப்பு நமக்கு அனுபவமாகட்டும்.**

# நற்கருணை ஆராதனை (பெரிய வியாழன்)

# இயேசுவின் பிரசன்னம்



**ஆரம்பப்பாடல் :–** துதிப்பாடல்
ஆராதிக்கின்றோம் நாங்கள் ஆராதிக்கின்றோம்
ஆத்ம நேசர் இயேசுவையே ஆராதிக்கின்றோம்

**வழிநடத்துபவர் :–**

அன்புக்குரியவர்களே, "நற்கருணை" இயேசுவின் பிரசன்னம் என்பதுபற்றி ஒரு மணித்தியாலம் இங்கு வீற்றிருக்கும் இயேசுகிறிஸ்துவோடு உரையாட இருக்கின்றோம். இறுதி இராப்போசனத்தில் இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்று சொன்ன இயேசு இதோ எங்கள் முன் வீற்றிருக்கின்றார். நற்கருணை ஆண்டவரிடம் பேசுவோமா? ஆராதிப்போமா?

வானதூதர்கள் ஆராதிக்கும் இறைவனை நாம் ஆவியாலும் உண்மையாலும் நிரப்பப்பட்டு ஆராதிப்போம். இவரை ஆராதித்தால் பாவங்கள் போய்விடும், நோய்கள் நீங்கிவிடும், பேயின் சக்திகள் ஓடிவிடும் இறைவல்லமை தீப்போல் இறங்கும் எனவே இறைவனை ஆராதிப்போம்.

**ஒருவர் சொல்லச் சொல்ல அனைவரும் திரும்பிச் சொல்லி ஆராதிக்கவும்.**

✶ இயேசுவே உம்மை ஆராதிக்கின்றேன் ~ 2
✶ தேவனே உம்மை ஆராதிக்கின்றேன் ~ 2
✶ என் ஆத்ம நேசரே உம்மை ஆராதிக்கின்றேன் ~ 2
✶ என் மீட்பரே உம்மை ஆராதிக்கின்றேன் ~ 2
✶ என் நண்பரே உம்மை ஆராதிக்கின்றேன் ~ 2
✶ என் அன்பரே உம்மை ஆராதிக்கின்றேன் ~ 2
✶ என்னைத் தேடி வந்தவரே உம்மை ஆராதிக்கின்றேன் ~2
✶ என்னை விடுவிப்பவரே உம்மை ஆராதிக்கின்றேன் ~ 2
✶ என்னை குணப்படுத்தியவரே உம்மை ஆராதிக்கின்றேன்~2
✶ என்னை அழைக்கின்றவரே உம்மை ஆராதிக்கின்றேன்~ 2

**ஒருவர் :–**

அன்பான இயேசுவே. காலங்களுக்கெல்லாம் முன்னரே உதித்தவரே. நீர் எங்களுகாக மனிதனாகப் பிறந்தீரே. உமது இறப்பு உயிர்ப்பு வழியாக வீழ்ச்சியுற்றப் படைப்பனைத்தையும் மனுக்குலத்தையும் விடுவித்தீரே. உமது மீட்பின் அருளை நாங்கள் இன்றும் தொடர்ந்து அனுபவிக்கநற்கருணை ஆராதனை வழியாக எங்களோடு பிரசன்னமாயிருக்கிறீரே. இந்த ஆராதனை வழியாக நாங்கள் உமது தெய்வீக பிரசன்னத்தை ஆழமாய் உணரவும், எங்களையே உமக்கு முழுமையாகக் கையளிக்கவும் அருள் தாரும்

**பிரசன்னத்திற்கு ஏற்ற பாடலைப் பாடவும்.**

**வாசகம் :** யோவா 6:51,56

**புதுவாழ்வின் அப்பம்**

"கிறிஸ்துவின் உடலை உண்பது" கிறிஸ்துவின் மனுவுரு ஏற்பைப் போல், தெய்வீக அன்பின் வீரியத்தையும் விண்ணக ஞானத்தின் இடறலையும் தன்னுடன் கொண்டு வருகிறது. விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால், அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன்... எனது சதையை உண்டு எனது இரத்தத்தை குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்" (யோவா 6:51,56)

இயேசு பாடுபடுவதற்கு முன்பு சீடர்கள் அவருடன் பந்தியில் அமர்ந்திருக்கும் போது இயேசுவின் மறைபொருளான வார்த்தைகள் அவர்களுக்கு அர்த்தமுள்ளதாக ஒலித்தன. "இயேசு அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு இது உங்களுக்கான என் உடல் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள். அப்படியே உணவு அருந்திய பின் கிண்ணத்தையும் எடுத்து, இந்த கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை, நீங்கள் இதிலிருந்து பருகும் போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" (1கொரி 11:23-25)

குருக்களின் சொற்களின் வாயிலாகவும், தூய ஆவியின் செயலாலும் நற்கருணை வழிபாடுகளில் இயேசு ஆண்டவர் இதே வார்த்தைகளையே மீண்டும் உச்சரிக்கின்றார். இயேசு அப்பத்தின் மீது "இது என் உடல்" என்று சொன்னதால் யார் நம்ப மறுப்பர்? அவரே இரசத்தின் மீது "இது என் இரத்தம்" என்று கூறியதால் நாம் இதை அவருடைய உருவில் அவருடைய உடலும், இரசத்தின் வடிவில் அவரது இரத்தமும் நமக்கு அருளப்படுவதால் கிறிஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் உண்ணும் போது கிறிஸ்துவுடன் ஒரே உடலாகவும் ஒரே இரத்தமாகவும் மாறுகிறோம். (எருசலேம் மறைக்கல்வி) இது வியத்தகு அழைப்பு! வாழ்வின் அப்பத்தை எடுத்து உட்கொண்டு, அவருக்கு நன்றி செலுத்துவது மெய்யாகவே தகுதியும் நல்லதுமாகும்.

**"என்னைப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்று இயேசு சொன்னார். அவரை விட்டுப் பிரியாமல் அவருடன் நம்மை இரண்டறக் கலப்பது திருநற்கருணை.**

**பாடல் : ஆராதனை ஆராதனை**

**வழிநடத்துநர் :**

நாம் கிறிஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் உண்பதால் அவரைப் போல் மாற்றம் பெற வேண்டும். இறைவன் மனிதனைப் படைத்த போது தன் சாயலாகப் படைத்தார். ஆனால் பாவம் மனிதனில் இறைச்சாயலை மறைத்துவிட்டது. மனிதன் என்பவன் இப்படித்தான் இருக்க வேண்டும், இப்படித்தான் வாழ வேண்டும் என்று இயேசு கிறிஸ்து வாழ்ந்து காட்டினார். நாமும் அவரைப்போல் மாறும்போது நம்மில் இறைச்சாயல் முழுமை பெறுகிறது. நாம் ஒவ்வொருவரும் இயேசுவாக வாழும் போது நாமே பிறருக்கு நற்செய்தியாகிறோம். "என்னைப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்று இயேசு சொன்னார். அவரை விட்டுப் பிரியாமல் அவருடன் நம்மை இரண்டறக் கலப்பது திருநற்கருணை. எனவே அவரோடு இணைந்து அருஞ்செயல் பல ஆற்றவும், அவராகவே மாறவும் இந்தச் சிறு உரையாடல் தியானத்தைச் செய்வோம்.

ஒரு மனிதன் மனிதனுடன் உரையாடுவது போல மோயீசன் இறைவனுடன் சீனாய் மலைமீது உரையாடினார் என்று விவிலியம் கூறுகிறது. இன்று அவ்வாறு இயேசுவுடன் பேசுவோம். அவர் சொல்வதைக் கேட்போம். ஒருவேளை இந்த உரையாடல் நம் மனதில் இருந்து எழுந்த கற்பனையாக இருந்தாலும், பாலாமின் கழுதை மூலமாகக் கூட பேசிய கடவுள் நம் உள்ளத்தின் மூலமாக பிரசன்னம் போல் அச்சுறுத்தும் பிரசன்னம் அல்ல. என் பிரசன்னம் சாந்தத்தின் பிரசன்னம், பொறுமையான பிரசன்னம், தாழ்ச்சியான பிரசன்னம், பெத்லேகம் குடிலில் வலுவற்ற குழந்தையில் பிரசன்னமாக இருந்தேன். இன்றும் பல அக்கிரமங்களையும் கொலை பாதகங்களையும் பார்த்துக் கொண்டு இயலாதவர் போல் இருக்கின்றேன். நான் ஒன்றும் செய்யாமல் இல்லை. அன்பு செய்து கொண்டிருக்கின்றேன். நீ என்னைப் பின்பற்ற விரும்பினால் நீயும் உன் வலிமையைக் காட்டுவதைவிட எளிமையைக் காட்டு.

**மனிதன் :**

ஆண்டவரே! மனிதனாகிய எனக்கு இதைப் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது. ஆனால் வலியவன் முன் நடுங்கி நிற்பதைவிட எளியவன் முன் அச்சமின்றி இருக்க விரும்புகின்றேன். இதே நிலையை என்னைச் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் அளிக்க விரும்புகின்றேன்.

**இயேசு :**

ஆம் சந்திப்பு, இது என் பணிகளில் முக்கியமான ஒன்று. மக்களைச் சந்திக்கவே மனு உரு எடுத்தேன். மனிதனைச் சந்திக்கவே அவனைத் தேடி அலைகிறேன். உன்னிடமும் பலமுறை நானே வந்து பேசுகிறேன். நான் உன்னைச் சந்திக்கும் வேளைகளை நீ புரிந்து கொள்ள வேண்டும்.

**மனிதன் :**

நீர் என்னைச் சந்திப்பதை நான் புரிந்து கொள்வதெப்படி?

**இயேசு :**

அதற்கு என் சிந்தனைகள் உன் சிந்தனைகள் ஆக வேண்டும். என் மனநிலைகளையே நீயும் கொண்டிருக்க வேண்டும். அப்போது என்னை நீ இனம் கண்டு கொள்வாய். "அவர் ஆண்டவர் தான்" என்று அருளப்பர் சொன்னது போல நீயும் சொல்வாய்.

**மனிதன் :**

திருத்தலங்கள் தோறும் உம்மைத் தேடி அலைகின்றேன். அமைதி தவழும் ஆலய மணி விளக்கில் உம் திருமுக தரிசனம் பெற முற்படுகின்றேன். உம் குரலைக் கேட்க ஆவலாக உள்ளேன். ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கின்றேன்.

**இயேசு :**

நீ என்னைக் காண ஆசைமேல் ஆசையாய் இருக்கின்றாய் என்று எனக்குத் தெரியும். ஆனால் நான் பேழையில் வாழ்வது போல் ஏழையிலும் வாழ்கின்றேன் என்பதை நீ மறந்து விடுகிறாயே

**மனிதன் :**

ஆம் ஆண்டவரே உம்மைப் பேழையில் காணத் தேவைப்படும் விசுவாசத்தை விட ஏழையில் காண விசுவாசம் அதிகம் தேவைப்படுகிறது.

**இயேசு :**

என்று நான் மனித அவதாரம் எடுத்தேனோ அன்று முதற்கொண்டே ஒவ்வொரு மனிதனிலும் நீ என்னைக் காண வேண்டும் என்று விரும்புகிறேன்...

பக்கம் 15



# செந்நீர் சுரக்கும் சிலுவை

உடைந்த நெஞ்சங்கள்
உருவம் பெற
உலகம் வந்த
உன்னதரின் மகனுக்கு,

தரணி தந்த தாங்க முடியா பரிசு,
சிரசில் சிலுவை.

சிலுவை ஏறிய சில நிமிடங்களில்
சிதறுகின்ற கண்ணீர்
சிறகொடிந்துவிடும் என்ற
சிந்தனைகள் இருந்தாலும்,
சரித்திரமாக்கவில்லை – அந்த
சிலுவை மரணம்.

ஏழைகளின் வயிற்றில்
ஏக்கமே இன்றும்
எதிர்நீச்சலாக உள்ளது.

அரசியல்வாதிகளின் அகத்தில்
அகங்காரமே இன்னும்
ஆழமாக உள்ளது.

செல்வம் படைத்தவன்
செவிகள் இன்னும்
செவிடாகவே உள்ளது.

பெண்களை புசிக்க
பிரளம் இன்னும்
புரட்சியோடு உள்ளது.

மனிதம் இன்னும்
மனிதாபிமானத்திற்குக்கூட
மதம் கேட்கிறது.

அடுத்தவனை அன்புசெய்ய
அர்த்தம் கேட்கிறது.
அறிவு இயந்திரம்.

பாவமென்ற புழுக்கத்திற்கு
பருவம் மறந்தது, மலராத
மொட்டுக்கள்.

விபச்சாரங்கள் கூட
விளையாட்டாகி விட்டது
விரக்தியின் வாழ்க்கையால்

உண்மையின் அர்த்தம்
என்னவென்று கேட்கிறது
ஏணியில் நிற்கும் எதார்த்தங்கள்.

வீதி வர மறுக்கிறது
வீதியிழுந்த உண்மைகள் பல

மதத்திற்காக மனிதனென்ற
மர்ம கட்டுக்குள்
முடங்குகிறது மனிதம்.

பணமிருந்தால் மட்டுமே
புரமனையும்கூட
பார்க்க முடியும்.

இறைவன் படைத்த
இயற்கையை அழித்து
இயந்திரம் இடம்பிடிக்கிறது.

இதனாலோ இறைவா
இன்னும் சுரக்கிறது,
உந்தன் இரத்தம்

பசிக்கு மேலும்
புசிக்க நினைக்கும்

தரணியர் நாம்
தடுப்பது எப்போது,
சிலுவையில் சுரக்கும்
செந்நீரை....

✝ ✝ ✝

## கறைபடிந்த பாத்திரங்கள்

விடுவிக்க வந்த விடுதலை வீரன்
வியாகுலத்துடன் வியர்வை சிந்தினான்.
பாவிகளின் கறைபடிந்த பாத்திரங்களுக்கு
பாராளும் வேந்தன் புண்ணிய முலாம்
பூசமுயன்றான்!

உணரத் தெரியாத ஊதாரிகள் நாம்
உப்பரிகையில் உலாவரும் உத்தமர்கள்!
மண்ணுயிர் காக்க வந்த தன்னிகரில்லா
தலைவனுக்கு
தன்னலக் கூட்டம் தந்த பரிசு மரணம்!

தப்பேதும் செய்யா தலைமகனைக் காட்டிட
முப்பது வெள்ளிக் காசுக்கு முத்தமிட்டானே!
பாரச்சிலுவையை தோளினில் சுமத்தி
பாதகம் செய்ததே பாவிகள் கூட்டம்!

விடிவானில் உதித்த அந்த விண்மீனின்று
இடி இடிக்க கழுமரத்தில் கதியற்று தொங்கியதே!
திருவிலா இரத்தம் நம் கறைபோக்க வடிந்ததே
மருவில்லா மாணிக்கம் மனுக்குலத்திற்காய்
மடிந்ததே!

எம் இதயக் கதவினை திறக்க முயன்றவருக்கு
இதயத்தில் ஈட்டிதான் நாம் அயலவருக்கு
இதயமற்று ஈட்டிவந்த இனிய பரிசோ!
இதனால் தான் இறைமகன் மீண்டு வரத்
தாமதமோ!

## நாம் யார் பக்கம்

இயேசுவின் பாடுகள், மரண வேளையில் அவருக்கு துணையாக நின்று ஆதரிக்காமல் பலர் இருந்தவர்கள். அதேவேளை ஆறுதலாக இருந்தவர்களும் இருந்தார்கள். நாமும் இந்த பலரில் ஒருவராக இருக்கின்றோமா? என்று சிந்திக்க அழைக்கின்றது புனித வெள்ளி.

- ஒருவரின் துயரத்தில் பங்கெடுக்காமல் எனக்கென்ன என்று தூங்கிட சுகம் காண்பவர்கள். மாற்கு 14:32-42
- முப்பது வெள்ளிக்கு முத்தமிட்டு காட்டிக் கொடுத்தவர்கள்
- இயேசுவைத் தெரியாது என மறுதலித்தவர்கள் மாற்கு 14:66-72
- தங்கள் மேலாடையைப் பற்றிக் கூட கவலைப்படாமல் தப்பித்தால் போதும் என ஓடிய சீடர்கள் மாற்கு 15:50-51
- அவரை நிர்வாணப்படுத்தி தீர தங்கள் மேலாடையைக் கிழித்துக் கொண்டவர்கள் மாற்கு 14:63
- முகத்தை மூடி உன்னை அடித்தவர் யார் என ஏளனம் செய்தவர்கள்.
- பரபாசே வேண்டும் என பாசாங்கு செய்தவர்கள் மாற்கு 15:11
- சிலுவையில் அறையும் என கூவுபவர்கள்
- காறி உமிழ்ந்து, கன்னத்தில் அறைந்து, கசையால் அடித்தவர்கள் மாற்கு 15:15-16,20
- உன்னையே காப்பாற்றிக் கொள் என நகைத்தவர்கள்.
- யூதர்களின் அரசே வாழி என ஏளனம் செய்தவர்கள்
- கைகளைக் கழுவிக் கொண்டவர்கள் மத் 27:25
- கசந்த திராட்சை ரசம் குடிக்கச் சொல்லி கட்டாயப்படுத்தியவர்கள்
- இயேசுவின் நிர்வாணத்தைப் பற்றி கவலைப்படாமல் அவரது ஆடையை குலுக்கல் சீட்டு போட்டவர்கள்.



- சிலுவையில் அறைந்தவர்கள்
- நீ மெசியா என்றால் உன்னையும், எங்களையும் காப்பாற்று என பழித்துரைத்தவர்கள்.
- இறந்த பிறகும் விலாவில் ஊடுருவக் குத்தியவர்கள்
- லஞ்சம் கொடுத்து தவறான பரப்புரையைச் செய்தவர்கள்.



### கிறிஸ்துவை ஆதரித்தவர்கள்

- “இதோ உமது அடிமை என்று இறுதிவரை துணை நின்ற அன்னை மரியா. (யோவான் 19:25-27)
- கட்டாயப்படுத்தினாலும் இறுதிவரை சிலுவை சுமந்த சீமோன். (மாற்கு 15:21)
- அநீதியைக் கண்டு தொதித்தெழுந்து மாரடித்துப் புலம்பி ஒப்பாரி குரலெழுப்பும் பெண்கள் (லூக் 23:27)
- என்னை நினைவில் கொள்ளும் என்று சரணாகதி அடைந்த நல்ல கள்வன் (லூக் 23:42)
- தன் தாயை ஏற்றுக் கொண்ட யோவான் (யோவா 19:26)
- இம்மனிதர் உண்மையிலே இறைமகன் என விசுவாசத்தை வெளிப்படுத்திய நூற்றுவத் தலைவன்
- தனக்கென்று இருந்த புதிய கல்லறையை தியாகம் செய்த அரிமத்தியா சூசை (யோவா 19:38)
- வெள்ளைப் போளமும், சந்தனத் தூளும் கொண்டு வந்த நிக்கோதேமு (யோவா 19:39)
- நறுமணம் பூசிய மகதலா மரியா, சலோமி மற்றும் சில பெண்கள் (மாற் 15:40-41)

**சிந்தனைக்கு**

**நாம் யார் பக்கத்தில் இருக்கின்றோம்.**

## கல்வாரி மலை



**கல்வாரி ஒரு**
**புனித மலை**
**விண்ணகமும்,**
**மண்ணகமும்,**
**இறைவனும், மனிதனும்,**
**மனிதனும், மனிதனும்**
**நன்மையும் தீமையும்,**
**பாவமும், புண்ணியமும்**
**சாவும், வாழ்வும்,**
**சந்தித்த புண்ணிய பூமி**


**சாவின் முடிவும்,**
**வாழ்வின் தொடக்கமும்**
**பாவத்தின் முடிவும்,**
**புனிதத்தின்**
**தொடக்கமும்,**
**தீமையின் முடிவும்,**
**நன்மையின்**
**தொடக்கமாக**
**அமைந்தது கல்வாரி**
**மலை**

**மனித கொடூர பாவமும்,**
**கடவுளின் அன்பின்**
**ஆழமும், சந்தித்த**
**இடம்**

**மனிதனின் பலவீனமும்,**
**கடவுளின் பாவமும்,**
**இறை இதயமும், மனித**
**இதயமும் முத்தமிட்ட**
**இடம்**

**அவநம்பிக்கையில்**
**நம்பிக்கையும்,**
**நோயில் நற்சுகமும்,**
**பகைமையால் புதிய**
**உறவும், கவலை**
**கலக்கங்களில்**
**ஆறுதலும், அமைதியும்**
**பெற்றுத் தரும் இடம்**
**தான் கல்வாரி மலை.**

# கிறிஸ்தவ விசுவாச வாழ்வுக்கு பொருள்தரும் இயேசுவின் உயிர்ப்பு



நசரேத்து இயேசு, யூத குடும்ப, சமூக, சமய, கலாச்சாரத்தில் ஆழ்ந்த இறைநம்பிக்கையுடன் வளர்ந்தார். இயேசுக்கிறிஸ்து நாசரேத்தூரில் ஒரு யூதகுடும்பத்தில் பிறந்தார். யூதக்கலாச்சாரத்தில் அறிவிலும், ஞானத்திலும் வளர்ந்தார் (லூக்.2:52). யூத சட்டங்களைக் கடந்து, நேர்மைக்கும், உண்மைக்கும் முதலிடம் அளிக்க வேண்டும் என்ற விழுமிய மனப்பான்மையில் வளர்ந்தார். திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப்பெற்றபோது அவர் பெற்ற அனுபவத்துடன் (லூக். 3: 21-22), இறைவனை “அப்பா”, என அழைத்து, இறைவனோடு தந்தை-மகன் உறவில் வளர்ந்தார். தம் சமூகத்தவர்கள் இறைநம்பிக்கையில் வேரூன்றிய, இறைசமூகமாக வாழ்ந்து, நிறைவு காண்பதே இறைவனின் விருப்பு என நம்பினார். எனவே “இறையாட்சி நெருங்கிவிட்டது, மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்” (மாற். 1:14-15) என்று அறிவித்தார். இறையாட்சியின் தன்மையை மற்றவர்கள் அறிந்திடும் வழிகளில் கற்பித்தார். இறையாட்சி வந்துவிட்டது என்பதை வெளிப்படுத்தும் செயற்பாடுகளைப் புரிந்தார். **இறையாட்சிக்காகவே வாழ்ந்து, துன்புற்று, மரணித்து, உயிர்த்தார். இயேசுவின் வாழ்வும், மரணமும், உயிர்ப்பும் தரும் படிப்பினை என்ன?**

## யூத நம்பிக்கையில் “உயிர்த்தெழுதல்”

“உயிர்த்தெழுதல்” என்பது மறுமைபற்றி யூதச் சமூகத்தில் நிலவிய முக்கிய ஒரு சமயக் கருத்தாகும். அதாவது, நிறைவு காலத்தில், இறந்த அனைவரையும் குறிப்பாக நேர்மையாளர்களை உள்ளடக்கிய விதத்தில் உயிர்த்தெழுதல் நிகழும் என்று அன்றைய யூத சமூகத்தினரிடம் காணப்பட்ட நம்பிக்கைக் கருத்தாகும். கடவுளின் ஆட்சியின் முழுமை மலரும் காலத்தில் நடக்க இருக்கும் ஒரு பொது நிகழ்ச்சியாக உயிர்த்தெழுதல் புரிந்து கொள்ளப்பட்டது.

புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றி பேசுகின்றன. ஆனால் யூத சமூகத்தினரிடம் ஏற்கப்பட்ட கருத்தின் அடிப்படையில் பேசவில்லை. மாறாக, அவை “இயேசு இறந்தோரிடமிருந்து எழுப்பப்பட்டார்” என உறுதியான செய்தியைத் தருகின்றன. உயிர்ப்புக்குப் பின்னர் இயேசு வாழ்வது முன்னைய வரலாற்று வாழ்வு அல்ல என அவை கூறுகின்றன. உயிர்ப்பின் வழியாக அவர் மறுமையை அடைந்துவிட்டார்; அவர் நித்தியத்துக்கும் நிறைவுக்கும் ஆகிவிட்டார். இதில் புதுமை என்றவென்றால், இயேசுவின் உயிர்த்தெழுதலுடன் “இறுதிநாள்” ஏற்கனவே விடிந்துவிட்டது என்ற நம்பிக்கையாகும். கடவுளின் ஆட்சியின் முழுமை மலரும் காலம் தோன்றிவிட்டது என்ற நம்பிக்கையாகும். ஆகவே, **இயேசுவின் உயிர்த்தெழுதல் விசுவாசிகளுக்கு இயேசுவை இரண்டாம் முறை சந்தித்து, இறையாட்சிக்குரியவராக வாழ்வதற்கு கிடைத்த அழைப்பாகும்.**

## சீடரின் அனுபவம்

இயேசுவின் இறையாட்சிக்கான வாழ்வு, பணி, பாடுகள், மரணம் இவற்றிற்கு பொருள்தருவது இயேசுவின் உயிர்ப்பாகும். **உயிர்த்த இயேசுவைக் “கண்டவர்கள்” அவர்களுடைய சீடர்கள் மட்டுமே.** யூதர்களுக்குப் பயந்து சீடர்கள் எருசலேமில் ஓரிடத்தில் கூடியிருந்தார்கள். அவர்கள் இன்னும் இயேசுவின் உயிர்ப்பை அறிந்திருக்கவில்லை அல்லது நம்பவில்லை. இயேசு கதவுகள் மூடியிருக்க அவர்கள் நடுவே தோன்றி, “உங்களுக்கு அமைதி உரித்தாகுக” என்று கூறி அவர்களை வாழ்த்தினார். “இறைவன் உமக்கு எல்லாவித நன்மைகளையும் அளிப்பாராக” எனப் பொருள் பெறுகின்றது. (20:19-23). இது யூதர்கள் ஒருவர் ஒருவரைச் சந்திக்கும்போது கூறும் “சலோம் அல்லேகும்” என்ற வாழ்த்துச் செய்தியாகும். இயேசுவின் இச்செய்தி அச்சங் கொண்டிருந்த சீடர்களுக்கு தெம்பையும் நம்பிக்கையையும் அளித்தது. இயேசு அவர்களுக்கு அளித்த சமாதானம் உலகம் அளிக்கும் சமாதானம் போன்றதல்ல (14: 27). அமைதி இறைவனின் கொடையாகும். இயேசு அவர்களுக்கு சமாதானம் உரித்தாகுக என்ற பிறகு “அவர்கள் மீது ஊதி தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்”என்றார். படைப்பின் தொடக்கத்தில் இறைவன் மனிதரில் ஊதி தம் உயிர் மூச்சை அளித்தது (தொநூ. 2: 27) போல இயேசுவும் தம் மூச்சை அவர்கள் மீது ஊதி அவர்களைப் பலப்படுத்துகிறார்.

**விசுவசித்தவர்கள் மட்டுமே இயேசுவின் உயிர்ப்பு பிரசன்னத்தை அனுபவித்தார்கள்.** எடுத்துக்காட்டாக, எமாவுசுக்குச் செல்லும் வழியில் அவருடன் பல கல் தொலைவு நடந்த பின்பும், உரையாடிய பின்பும் இரண்டு சீடர்களும் அவரை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. இறுதியில் அப்பம் பிட்கையில்தான் அவரை இனம் கண்டு கொள்கின்றனர் (லூக். 24: 13-32). ஏனைய சீடர்களும் அவரை ஓர் ஆவி என்றே நினைக்கின்றனர் (லூக். 24:37). மகதலா மரியா அவரைக் கண்டுகொள்ளாது, தோட்டக்காரன் என நினைக்கின்றார் (யோவா. 20: 14-15). மீன்பிடிக்கச் சென்ற சீடர்களும் கரையில் நின்ற அவரை அறிந்து கொள்ளவில்லை (யோவா. 21: 4). மேலும் அவர் முன்புபோலன்றித் திடீரெனத் தோன்றுகிறார், மறைகிறார், கதவுகள் மூடியிருக்கும்போதும் உள்ளே வருகிறார், வெளியே செல்கிறார். இத்தெளிவற்ற சூழலில், அவரில் விசுவாசம் கொண்டவர்கள் அவர் வாழ்கிறார் என நம்புகிறார்கள்.

இயேசுவின் சீடர்களுள் ஒருவரான தோமா இயேசு சீடர்களுக்குத் தோன்றியபோது அவர்களுடன் இருக்கவில்லை (யோவா. 20: 24-29). அவர் இயேசுவோடு எருசலேம் சென்று சாகவும் தயாராக இருந்தவர். அவர் எதையும் எளிதாக ஏற்றுக் கொள்ளாத இயல்பு கொண்டவர். மற்றச் சீடர்கள் அவரிடம் “ஆண்டவரைக் கண்டோம்” என்று சொன்னபோது, அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. சீடர்கள் கதவுகள் பூட்டப்பட்ட அறைக்குள் இருந்த வேளையில் அவர்கள் நடுவே இயேசு தோன்றினார். தோமா விரும்பியது போல தம்மைத் தொட்டுப்பார்க்க இயேசு அவரிடம் கேட்டுக்கொண்டார். **“ஐயம் தவித்து நம்பிக்கை கொள்”** என்றார். உடனே தோமா **“நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!” என்று சொல்லி அவர் மீது விசுவாத்தை அறிக்கையிட்டார்.** இங்கே தோமா இயேசுவை கடவுள், ஆண்டவர் என அழைக்கிறார். அப்போது இயேசு தோமாவிடம் “நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்” என்றார். யோவானின் கருத்தில் “காண்பது” என்பது விசுவசித்தல் என்ற பொருளாகின்றது. மகதலா மரியா இயேசுவைக் கண்டதாகக் கூறியதை சீடர்கள் நம்பவில்லை. அவர்கள் உயிர்த்த இயேசு அவர்களுக்குத் தோன்றிய பின்பே நம்பினார்கள். இவ்வாறு **இயேசுவின் உயிர்த்த தோற்றங்களைக் கண்டு விசுவாசத்தை அறிவித்த சீடர்களின் அனுபவமே இயேசுவின் உயிர்ப்புக்கான ஆதாராமாகும்.**

## சீடர்களின் அறிவிப்பு

சீடர்கள் இயேசு உயிர்ப்பு அனுபவத்தின் ஒளியில், அவரது வாழ்வு, படிப்பினைகள், செயல்கள், பாடுகள், மரணத்தின் முழுமையைக் கண்டார்கள். இஸ்ரயேல் மக்கள் எதிர்பார்த்திருந்த (1சாமு. 2:10; திபா 2: 2), அருள்பொழிவு பெற்றவர், இறை மகனாகிய மெசியா இயேசுவே என நம்பினார்கள். இயேசுவை கிறிஸ்து ஆண்டவர்; கடவுளே அவரை உயிர்த்தெழச் செய்தார் என அறிக்கையிட்டார்கள் (மாற். 15: 39; யோவா. 20: 30). “இஸ்ராயேல் மக்களே,“கடவுள் நாசரேத்து இயேசுவின் வழியாக உங்கள் நடுவில் வல்ல செயல்களையும், அருஞ்செயல்களையும் அடையாளங்களையும் செய்து, அவரை இன்னாரென்று உறுதியாகக் காண்பித்தார்” நீங்கள் திருச்சட்டம் அறியாதார் மூலம் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள். ஆனால் கடவுள் அவரை உயிர்த்தெழச் செய்தார்” (திப. 2: 22-24). இதுவே இயேசு பற்றிய சீடர்களின் தொடக்க அறிவிப்பின் கருவாகும். முதல் சீடர்களுக்குப் பின் வந்தவர்கள் சீடர்கள் அறிவித்ததைக் கேட்டே நம்பினார்கள்.

## பொருள்தரும் இயேசுவின் உயிர்ப்பு

இயேசுவின் உயிர்த்தெழுதலால் சீடர்கள் பெற்ற அனுபவமும், அவர்களின் அனுபவமும் அறிவிப்பும், கிறிஸ்தவ விசுவாசிகளின் நம்பிக்கைக்கு அடிப்படையாகும். இயேசுவின் உயிர்ப்பு பற்றிய செய்தியை முதலில் எழுதியவர் தூய பவுல் (1கொரி. 15: 3-7). **“கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாகிவிடும்”** (1கொரி. 15:14) என்கிறார் தூய பவுல். “இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப்பட்டுள்ளன” (யோவா. 20:31) என்கிறார் தூய யோவான்.

உயிர்த்த இயேசு அச்சமும் ஐயமும் கொண்டிருந்த சீடர்களுக்குத் தோன்றி துணிவையும் நம்பிக்கையையும் அளித்தார். அவர்களுக்குப் புது வாழ்வளித்தார். சிலுவை மரணத்தின் பின்பு சிதறுண்டிருந்த சீடர்களை நற்செய்தித் தூதுப் பணிக்கு தயார்படுத்தினார். இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பால் சீடர்களும், அவரில் விசுவாசம் கொண்டவர்களும் இயேசுவின் படிப்பினைகளை வாழ வேண்டும் என்ற நோக்கம் கொண்டார்கள். அவர்கள் இயேசுவின் புதிய நெறியைப் பின்பற்றினார்கள் (திப. 9: 2). அவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்; துன்புறுத்தப்பட்டார்கள். ஆயினும் அவர்கள் இயேசுவின் பாதையில் புதிய வாழ்க்கை முறையை வாழ்ந்தார்கள். உயிர்த்த இயேசுவின் பிரசன்னத்தில் நம்பிக்கைகொள்ளவும், சாட்சியத் தன்மையுடன் இயேசுவைப் பின்சென்று நம் சமூக, கலாச்சாரச் சூழலில் வாழவும் நாமும் அழைக்கப்படுகின்றோம்.

**அருட்தந்தை : ஜெராட் டீ ரொசாய்ரோ, அ.ம.தி.**







# சிலுவைப் பாதை




### 1. தீர்ப்பிடப்படுகிறார்

அடித்துச் சிலுவையிலே ஏற்றிக் கொல்லுங்கள்
அமைதி கெடுக்கு மிந்த நீசனை - என
ஆர்ப்பரிக்கும் யூதர்தம் ஆவேசக் குரல் கேட்டு
ஆளுநன் பிலாத்துவுக்கோ யோசனை
அவனியில் நன்மையொன்றே செய்து நடந்திட்ட
மண்ணுயிர்க் கெல்லாம் தாசனை - அன்று
சிலுவையிலறைந்து கொல்ல ஒருசார்பாய்
முடிவெடுத்து
அநீதியாய்த் தீர்ப்பிட்டான் ஈசனை!



### 2. தாமே சிலுவை சுமக்கிறார்

விண்ணக அரசிலே இடம்பிடித்து வாழ்வதற்கு
விதைகளாய் போதித்த சாரத்தை - மனதில்
விளங்காமல் போனவர்கள் வெறியோடு கூடி
வேகமாய் செய்கின்ற கோரத்தை
விலக்கித் தடுத்திட நினைத்தவர் யாருமே
வெளிக்காட்டவில்லை நெஞ்சின் ஈரத்தை
வேதனை மிகப் பொங்க விண்ணகத்தின் விருப்பப்படி
இயேசு சுமந்தார் சிலுவை பாரத்தை!



### 3. முதல் முறை கீழே விழுகிறார்!

இரவெல்லாம் துன்புறுத்தல், ஏராள அச்சுறுத்தல்
இழிந்த நிலையில் உடல் கெட்டது
ஏளனப் பேச்சுக்கள் இழிவு தரும் சொற்களெல்லாம்
இயேசு பிரான் இதயத்தைச் சுட்டது
இம்சை தரும் கசையடிகள் இரக்கமில்லா தடியடிகள்
எண்ணில்லா முறை உடம்பில் பட்டது
இதனாலே வலுவிழந்த இயேசுவின் திருவுடலோ
முதல் முறையாய் சரிந்து மண்ணைத் தொட்டது!



### 4. திருத்தாயை சந்திக்கிறார்

பாரத்தைச் சுமந்து வரும் பரிதாப திருச்சுதனை
தூரத்தே தாய் மரியாள் பார்த்தாள்
பண்பில்லா மனிதர்மீது அன்புமிகக் கொண்ட மகனின்
அவல நிலைக்காய் அழுது தீர்த்தாள்
பாடுபடும் பிள்ளையின் தோற்றம் பயங்கரத்தை
வருவிக்க
பார்வைகளால் இருவருமே சந்தித்த வேளையிலே
பரிசுத்த தாய் கண்ணீர் வார்த்தாள்!



### 5. சீமோன் உதவுகிறார்

பழியிலே சிக்கிக் கொண்டு படாத பாடுபட்ட
பரமனுக்கு சிலுவைச் சுமை வலித்தது
பாரமதை சுமக்க முடியா பரிதாக நிலை கண்டு
பரிகசித்த கும்பல் வெகுவாய் களித்தது
வழியிலே போனவனாம் சீமோனை வற்புறுத்தி
வீரர் கூட்டம் சிலுவை சுமக்க விளித்தது.
வாஞ்சைமிகு இயேசு முகம் பார்த்த
அவன் தோள்தாமே சிலுவையினைச்
சுமந்து உதவி அளித்தது



### 6. திருமுகம் துடைக்கப்படுகிறார்

வெகுகன சிலுவையை பொதுசனம் பார்த்திட
வேதனைகள் அவருக்குத் தொடர்ந்தது
வேறுபட்ட முகத்தோடு தூயவரின் நிலை கண்டு
வெரோணிக்கா நங்கை மனம் அதிர்ந்தது
மிகுதுயர் பொங்கிட அவர் முகம் துடைத்திட
மென்மை கூட திண்மை பெற்றுத் துணிந்தது
மெய்யான வலிமை என்றும் அன்பே என்னும்
தத்துவத்தால் கைத்துணியில் கடவுள் முகம் பதிந்தது!



### 7. மறுமுறை மண்ணில் விழுகிறார்

சிலுவை தரும் பாரத்தைச் சுமக்க முடியாமல்
உடலோடு மனமும்கூட சோர்ந்தது
சிந்திவிட்ட செங்குருதி சிதைந்துவிட்ட வலிமையினால்
சிலுவைகூட பாதையிலே ஊர்ந்தது
சிறுநேரம் தாமதித்தால் சீக்கிரம் நகரச் சொல்லி
சாட்டையடிகள் அவருடலில் சேர்ந்தது
சிக்கிக் கொண்ட காலிடற முன் நடக்க முடியாமல்
இரண்டாம் முறை மண்ணில் விழ நேர்ந்தது



### 8. ஆறுதல் அளிக்கிறார்!

எருசலேம் நகருக்கு வெளியிலே பெண்கள் பலர்
இயேசு வரக் கண்ணீர் வடித்து நின்றனர்
எல்லையில்லா அன்பினாலே உறவொன்று பிரிகின்ற
எண்ணம் பொங்க மார்பிலடித்துக் கொண்டனர்
இரக்கமே உருவான இயேசுவின் திருச்சொற்கள்
எனக்காக அழ வேண்டாம் என்றன அவர்களுக்காய்
மக்களுக்காய் அழச் சொன்ன இயேசு பிரான்
கால்களிரண்டும் கடந்து வழி சென்றன!



### 9. மூன்றாம் முறை கீழே விழுகிறார்!

சித்திர வதைப்பட்டார் உடல் முழுக்க அடிப்பட்டார்
இதுதானே இரவு முழுக்க நடந்தது
சிரசிலே முள்முடியை அழுத்திச் சிரித்தவர்கள்
செய்த கொடுமை எண்ணிக்கையைக் கடந்தது
நித்திரை கொள்ள இரவில் நிந்தை அவமானங்களின்
நெருக்கடியால் உடல் வலிமை இழந்தது
இத்தனை போதாதென்று இப்போது சிலுவை பாரம்
மூன்றாம் முறை தேகம் மண்ணில் விழுந்தது!



### 10. உடைகளை இழக்கிறார்

தச்சன் மகனெனினும் தயக்கமின்றி போதித்து
உச்சக்கட்ட கொடுமைகளில் உழன்றார்
இச்சகம் பேசுவோரின் மத்தியிலே தாம் துணிந்து
இச்செகத்தில் மீட்பைத் தர முயன்றார்
துச்சமாய்த் தம்முயிர் நினைந்து
தூய இறையாட்சி மலர
அச்சமின்றி போதித்து உயர்ந்தார் - அவர்
அணிந்திருந்த மேலுடைக்கும்
விலை மதிப்பைக் கண்டு வீரர்
அவர்களுக்குள் சீட்டுப்போட்டு பகிர்ந்தார்!



### 11. சிலுவையில் அறையப்படுகிறார்

மனிதர்கள் கண்டறிந்த மரணங்களில் கொடியது
சிலுவையிலே மரணம் என்று ஒன்றுதான்
மாபாவம் செய்தோரே பெறுமிந்த தண்டனையை
இயேசுவுக்கு அளிக்க வேண்டுமென்றுதான்
யூதர் மனங்களிலே வெறியோடு
சிலுவையில் அறைந்த கொடும்
பாதகம் நிகழ்ந்ததுவும் அன்றுதான்
மரச்சிலுவையில் தொங்குகின்ற
மனுமகனின் திருவுடலை
மடியேந்தி நின்றது கல்வாரி குன்றுதான்!



### 12 உயிரினைத் துறக்கிறார்

ஆணவம் படைத்தோரின் ஆகாத காரியத்தால்
ஆணிகள் மூன்றுக்குள்ளே அடங்கினார்
அன்பு நிறை உள்ளத்தோடு
அகிலத்தை மீட்டெடுக்க
அமைதியாக சிலுவையிலே முடங்கினார்
மானுடம் காத்திடவே மாபரனார் இயேசு
மரணம் நெருங்க நெருங்க உயிர் மயங்கினார்
மண்ணிலெங்கும் இறையரசை
நிலைநிறுத்தும் சாதனையை
தம்முயிரைக் கொடுத்து அன்று தொடங்கினார்



### 13 தாய் மடியில் கிடக்கிறார்

உயிரிழந்த திருமகனை
அருள்நிறைந்த அன்னைமரி
மடிசுமக்க துக்கம் தொண்டையை அடைத்தது
உண்மைக்கெனப் பாடுபடும்
மானிடர்கள் யாவருக்கும்
துயரம்தானே பரிசாகக் கிடைத்தது - நல்லார்
வயிறெரிய நடந்த திருப்பாடுகளின் நிகழ்வு எல்லாம்
வரலாறுதானே உலகில் படைத்தது - அந்த
வானகத்து முடிவுப்படி ஞானமகன் ஆன நிலை
வையகத்தின் பாவக் கேட்டை உடைத்தது!



### 14. அடக்கத்தில் முடிக்கிறார்

அன்பு ஒன்றை மையமாக்கி
சத்தியத்தில் வாழ்ந்த மேனி
அவனி நீங்கக் கல்லறையை அடைந்தது - இயேசு
அனுபவித்த துன்பங்களை அருகிருந்து பார்த்தவர்தம்
மனங்கள் அன்று சுக்கு நூறாய் உடைந்தது
நண்பன் இலாசர் நயீன் இளைஞன் யாயீர் மகன்
மூவருக்கும் உயிர் கொடுத்த தோற்றம்
அன்று புதைந்தது நல்ல மாற்றம் பெற்ற
மனதினோடுநாம் புதைக்கும் பாவங்களால்
நாமும் உயிர்ப்போம்
என்பதை யார் அறிந்தது?

**இயேசுவின் பாடுகளோடு**
**இணைந்து எம் பாவ வாழ்வை**
**களைந்து மனமாற்றம் பெற்ற**
**புது வாழ்வை எம் வாழ்விலும்**
**தொடர்வோம்**



# உயிர்ப்பு பெருவிழா



நமது விசுவாசத்தின் அடித்தளமாகவும்,
விழாக்களுக்கெல்லாம் சிகரமாகவும் அமைவது
ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா

எனவே! வையகமே விழித்தெழு!
வானகமே துதித்தெழு!
வல்ல தேவன் உயிர்த்தெழுந்தார்!
வாழ்த்தி வணங்கி ஆர்ப்பரி

சாவை வென்று வாழ்வு தந்த தேவ மைந்தன்
சாவுக்கு சவுக்கடி கொடுத்த சத்தியவானே
சத்தியம் தளைக்க சகலதும் புரிந்தவனே
சமாதானம் சாந்தி சகலர்க்கும் அருள்வாயே!

சாவை முற்றிலும் ஒழியவைத்து
சாத்தானை அழித்தவரே ~ சாவே உன்
வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?
என்பதற்கேற்ப வெற்றி வீரனாய்
விடிவெள்ளியாய் எழுந்தவரே

மானிடரை மீட்க மனிதவதாரம் எடுத்தவரே
மாந்தர்கள் எம் வாழ்விற்கு அர்த்தம் கொடுத்தவரே
மீண்டெழுந்து மீட்பை ஈர்ந்தவரே
மேலுலகைச் சார்ந்தவற்றை நாடவைத்தவரே
உம் தாழ் பணிந்தோம்! நமஸ்காரம்

தந்தையாம் இறைவன் சித்தத்தை
சிரமேற்கொண்டவரே தனயனாய் கீழ்ப்படிந்து
தன்னை தாழ்த்தியவரே கரம் குவித்து சிரம்
பணிந்து வணங்கினோம் உம் பாதங்களை
தரணி வாழ அனைவரும் ஒப்புரவு
வழங்கியவரே!

பாவநோயின் நின்று நம்மை மீட்கவே,
பாரச்சிலுவை சுமந்து மரணமேற்ற வேந்தனே
பாவியாக இருந்த எம் பாவம் போக்கவே,
பாசம் பொழிந்து பாவிகளை மீட்டவரே!

அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு
ஒப்பானவரே ~ அன்பைப் பொழிந்து
சாவவை வென்றவரே
அகிலமெங்கும் அமைதியின் செய்தியை
கொணர்ந்தவரே அடியவர்கள் நாம்
அடிபணிந்தோம், தாழ்பணிந்தோம்

இருள் சூழ்ந்த உலகிற்கு ஒளி விளக்கை ஏற்றியவரே
இடர் நிறைந்த வாழ்விற்கு
அமைதி வாழ்வு அளித்தவரே
வாழ்வளிக்கும் வள்ளலாக வையகம் வந்தவரே
வற்றாத பேரன்பை பொழிந்து புதுவாழ்வு தருவீரே

புனிதத்தின் நறுமணம் புவியெங்கும் பரப்பியவரே
புண்ணான நெஞ்சிற்கு புத்துயிர் வார்த்தவரே
புவி மீட்க பூவுலகில் உதித்தவரே ~ புவிதனில் வாழும்
மாந்தர்கள் எமக்கு புத்தொளி தருவீரே

மூவுலக இராஜேஸ்வரனாய்
முடிவில்லா ஆதிநாதனாய் ~ முடிவில்லா வாழ்வை
வழங்கியவரே முத்தமிழ் தலைவனாய்
மூவொரு இறைவனாய் மூவுலகமும்
ஆண்டு அரசாள்பவரே முத்தம் செய்து
வணங்கினோம் பராபரனே

வாழ்வினை இழந்து வாடிய உள்ளங்களுக்கு
வாழ்வு கொடுப்பவரே வரட்சியை நீக்கி
வளமையை ஈந்தவரே வாழ்வாகி வழியாக
உயிராகி உயிர்கொடுக்கவே வந்தவரே
வாழ்வை அளிக்கும் வள்ளலாக வையகம் வந்தவரே
வணங்கியே உன் பாதம் சரணடைந்தோம்

உயிர்ப்பும் உயிரும் நானே என உலகிற்கு
உரைத்தவரே உத்தானமும் ஜீவனுமாய்
உயிர்த்தெழுந்தவரே உலகமெங்கும் உம் ஆட்சி
பரவிடவே உத்தமர்களாய் நாம் வாழ வழி
சமைத்தவரே வந்தனை செய்கிறோம், வாழ்த்தி
வணங்கிடுவோம்

காலங்களைக் கடந்த கடவுளாய்
கண்முன் தோன்றினீரே
கரங்களில் காயமேற்று காவியம் படைத்தவரே
கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
காசினி வாழ வரம் தருவாயே வள்ளலே
வாழ்த்தினோம், வணங்கினோம்

ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்
மீண்டும் கூறுகின்றேன் மகிழுங்கள் (பிலி 4:4)

மகிழ்ச்சியின் வேந்தன் மாமன்னன்
உயிர்த்தெழுந்தார் ~ மண்டியிட்டே
மன்றாடுகின்றோம் மாபரனே
மாசற்ற உம் வாழ்வால்
வையகம் மீண்டது போல்
தாசர்கள் எம்மை தயவுடன் வழி நடத்துவீரே

இயேசுவின் உயிர்ப்புதான் தமது வாழ்க்கையில்
அடிப்படை அனுபவம் ~ இயேசுவின்
உயிர்ப்பு தான் நம் வாழ்விற்கு நம்பிக்கையும்
அர்த்தத்தையும் அளிப்பது

இயேசுவின் உயிர்பிற்கு நமது வார்த்தையால்
வாழ்வால் சாட்சி பகர்வோம் சான்று பகர்வோம்
சரித்திரம் படைக்க சகலரும் புறப்படுவோம்
நற்சான்று படைக்க ~ சத்தியவான்
இயேசு சாவை வென்றார்

போற்றியே உம்மை வணங்கிடுவோம்
புகழ்ந்தோம் உம் மாட்சிமையை
வாழ்த்தினோம் வேந்தனே
வந்தனைகள் செய்கின்றோம் மாபரனே

**ஆக்கம் : அருட்சகோதரி டெலா றோஸ் (அ.கா)**

## ஈஸ்டர் திருநாள் தோன்றிய வரலாறு

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததை ஈஸ்டர் பெருவிழாவாக நாம் கொண்டாடி மகிழ்கின்றோம். எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த, ஆங்கிலேய அறிஞர் செயின்ட் பீட் என்பவர்தான் EASTER என்ற வார்த்தையை EOSTRE மற்றும் OSTRE என்ற வார்த்தையிலிருந்து உருவாக்கினார். இவ்விரண்டுமே இளவேனிற் காலத்தையும், செழிப்பையும் குறிக்கும் தெய்வங்களின் பெயர். (Goddes of Spring & Fertility)

ஐரோப்பா தேசத்து மக்கள் கொண்டாடிய பாஸ்கா திருநாள் PESACH என்ற யூத பெயரிலிருந்து வந்தது. அவர்கள் இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தளையிருந்து விடுதலையானதை 8 நாட்கள் "பாஸ்கா விழா" என்ற பெயரில் கொண்டாடினர். பின்னர் இதையே ஈஸ்டர் பெருநாளாகவும் கொண்டாட ஆரம்பித்தனர்.

### ஈஸ்டர் கொண்டாட்டங்கள் :

கிழக்கிந்திய நாடுகளில் இளவேனிற் காலத்தின் தொடக்கத்தில் வரும் பௌர்ணமியை கணக்கில் கொண்டு அதன்பின் வரும் முதலாவது ஞாயிறை ஈஸ்டர் பெருவிழாவாகக் கொண்டாடினர். இதனால் தான் ஈஸ்டர் விழாவானது குறிப்பிட்ட நாளிலே வருடந்தோறும் கொண்டாடும் விழாவாக அல்லாமல் பங்குனி 22லிருந்து சித்திரை 25க்குள் கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால் மேற்கத்திய நாடுகளில் பாஸ்கா விழா கொண்டாடும் நாளை பொறுத்து ஈஸ்டர் விழா கொண்டாடப்படுகிறது. ஈஸ்டர் பெருவிழா என்பது திருநீற்றுப் புதனிலிருந்து சரியாக 46வது நாள் கொண்டாடப்படுகிறது. ஆறு ஞாயிற்றுக் கிழமைகளுக்கும் நோன்பிலிருந்து விதிவிலக்கு கொடுக்கலாம்.

## ஈஸ்டர் முட்டைகள் :



ஈஸ்டர் பெருவிழாவை இயேசு இறந்து, உயிர்த்து ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்குப் பின்புதான் கொண்டாட ஆரம்பித்தனர். ஈஸ்டர் முட்டைகள் வெளிநாடுகளில் மிகவும் பிரபலம். முட்டைகள் வண்ண நிறங்களால் அலங்கரிக்கப்பட்டு அதனைத்து பேக்கரி கடைகளிலும் வணிக அங்காடிகளிலும் விற்கப்படுகின்றன. முட்டை என்பது புது பிறப்பின் புது உயிரின் அடையாளம். பழங்கால கிரேக்க மக்கள் கடும் குளிர் காலம் போய் பசுமையான இளவேனிற்காலம் தொடங்குவதை ஒருவருக்கொருவர் முட்டைகள் கொடுத்து கொண்டாடுவர். அதுவே பின்னர் ஈஸ்டர் பெருநாளிலும் வழக்கமாகிப் போனது. இயேசு சிலுவையில் மரித்து உயிர்த்தது மனித குலத்திற்கு புத்துயிர் ஊட்டியது என்பதன் நினைவாகவே முட்டைகள் விற்கவும் வாங்கவும் ஆரம்பித்தனர். உலகப் பிரசித்திப் பெற்ற முட்டைகளானது தங்க சிலைகள், ஆபரணங்கள் மற்றும் அழகுப் பொருட்களால் அலங்கரிக்கப்படுகின்றன. முதல் முட்டையானது ரஷ்யா நாட்டு தொழிலதிபர் ஒருவருக்கு பரிசாக வழங்கப்பட்டது. பின்பு அவர் அதை உலகமெங்கும் பிரசித்தப்படுத்தினார். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஈஸ்டர் முட்டைகளை உருட்டி விளையாடும் போட்டிகள் கூட நடத்தப்படுகின்றன.

### ஈஸ்டர் பருவகாலம் என்பது எப்பொழுது வரும்?

ஈஸ்டர் பருவகாலம் என்பது ஈஸ்டர் திருநாளன்று தொடங்கி 50 நாள்கள் வரை நீடித்து பெந்தகோஸ்தே நாளன்று நிறைவுபெறும்.

## ஈஸ்டரின் வெவ்வேறு பெயர்கள் என்ன?

நிறைய ஐரோப்பிய மொழிகளில் ஈஸ்டர் என்ற பெயர் பாஸ்ஓவர் என்ற வார்த்தையில் இருந்து தான் வந்திருக்கின்றது.

அ. கிரேக்க மற்றும் லத்தீன் மொழிகளில் **பாஸ்ச்சா** என்று அழைக்கப்படுகிறது.
ஆ. இத்தாலிய மொழியில **பாஸ்குவா** என்ற அழைக்கப்படுகிறது.
இ. ப்ரென்சு மொழியில் **பேக்கூஸ்** என்று அழைக்கப்படுகிறது.
ஈ. இஸ்பானிய மொயில் **பாஸ்குவா** என்று அழைக்கப்படுகிறது.








## 02 புதிய கல்வாரி...

இயற்கை வனப்பாலும் சூழ்ந்த, அமைதியான, ஏகாந்தமான இடமாகும், இங்கு அமைக்கப்பட்டுள்ள இந்த கல்வாரிக் காட்சிகள் நிச்சயமாக விசுவாசிகளை இறைவன் பக்கம் திருப்பும் என்பதில் எவ்வித அச்சம் இல்லை எனவும், கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தின் இந்த முயற்சி இப்போது மட்டுமல்ல இனி வரும் விசுவாச சந்ததியருக்கும் ஒரு அற்புத எடுத்துக்காட்டு எனவும் ஆயரவர்கள் தனது மறையுரையில் கூறினார்.

தவக்காலம் மன மாற்றத்தின் காலம் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து திருப்பலியில் இறைமகன் இயேசுவின் அன்பினைச் சுவைக்க அனைவரும் வருக! அமைதியில் செபத்தில் இறை அனுபவம் பெறுக!

**தொடர்புகளுக்கு: அருட்.தந்தை. பிரியந்த கமல்**

**சுரங்க செ.தா – 071 812 4273**

**அருட்தந்தை. றெஜினோல்ட் செ.தா – 077 623 0750**

**அருட்தந்தை. ஜோசப் செல்வன் செ.தா – 077 953 2662**

**மின் அஞ்சல் : rosariomonastery2012@gmail.com**

## 02 புனித யோசேவ்வாஸ்

போளவத்தைப் பங்குத் தந்தை வண. ஜயந்த பெரேரா, உதவிப் பங்குத் தந்தை வண. பிரதீப் சேவியர் ஆகியோரின் தலைமையின் கீழ் இந்த யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. சிலாப புனித அந்தோனியார் உயர்கல்வி நிலையத்தின் தலைமைக் குரு (முன்னாள் போளவத்தைப் பங்குத் தந்தை வண. அன்டன் ரஞ்சித் பெர்னாண்டோ அவர்களும் இந்த யாத்திரையில் கலந்து சிறப்பித்தார். இத்திரு யாத்திரையில் பங்கு மக்கள் ஐந்நூறு பேர் கலந்து கொண்டனர். புனித யோசேவ்வாஸ் முனிவரின் இலங்கை வருகையுடன் தொடர்புடைய, மன்னார் மறை மாவட்டத்தில், பல சரித்திரப் பெருமை வாய்ந்த ஆலயங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு இந்த யாத்திரையின் மூலம் பங்கு மக்களுக்குக் கிடைக்கப் பெற்றது பெரும் பேறாகும். பரப்புக் கடந்தான் கர்த்தர் ஆலயம், மடு அன்னையின் ஆரம்ப இடமான மாந்தை திருத்தலம், புனிதர் மன்னார் துறையில் காலடி பதித்த சவுத்பார் எனப்படும் இடம், மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகள் ஆலயம், போனவத்தைப் பங்கு மக்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த வண. கொன்சால்வேஸ் அடிகள் யோசேவ்வாஸ் முனிவரை முதல் முதலில் சந்தித்த பறப்பான் கண்டல், மோட்ச அலங்காரி நாயகியின் ஆலயம் போன்ற வணக்கஸ்தலங்கள் தரிசிக்கப்பட்டன. தரிசிக்கப்பட்ட இடங்களின் கத்தோலிக்க வரலாறு முக்கியத்துவம் பற்றி பங்குத் தந்தையர்கள் விளக்கவுரை அளித்தனர். பறப்பான் கண்டல் தேவாலயத்தில் வண. அன்டன் ரஞ்சித் பெர்னாண்டோ அவர்களால் ஞாயிறு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இறுதியாக யாத்திரைக் குழு மருத மடுத் திருப்பதிக்குச் சென்று செபமாலை அன்னையின் ஆசீரை மன்றாடியதன் பின்னர் யாத்திரையை முடித்துக் கொண்டு ஊர் திரும்பினர். இத்திரு யாத்திரைக்காக சிலாப மறைமாவட்ட யோசேவ்வாஸ் குழுச் செயலாளர் திரு. ஷெல்டன் பெர்னான்டோ அவர்களும் ஆலோசனைகள் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**தகவல் : மேரி அலெக்சியா திரேசா (உதவி ஆசிரியை)**

## 10 இயேசுவின்...

**மனிதன் :**
சில வேளைகளில் உம்மை ஏழையில் கண்டு அன்பு செய்வதும், உதவுவதும் எளிதாக உள்ளது. ஆனால் எல்லோரிடமும் உம்மைக் காண்பது எப்படி? சிலரைக் காணும்போது அவர்களுடைய குற்றங்குறைகளைத் தானே நான் முதலில் காண்கிறேன். எப்படி உம்மைக் காண்பது?

**இயேசு :**
மனிதன் என்றாலே குற்றங்குறைகள் உள்ளவன் தானே. உன்னிடம் குற்றங்குறைகள் இல்லையா? உன்னில் நான் பிரசன்னமாக இருக்கும்போது அடுத்தவர்களில் ஏன் நான் இருக்கக் கூடாது?

**மனிதன் :**
ஆம் ஆண்டவரே நான் உம்மை எல்லோரிலும் கண்டு அன்பு செய்யத்தான் விரும்புகிறேன். இத்தனை முறை நான் உம்மை அருந்தியும் ஏன் உம்மைப் போல் நான் மாறவில்லை?

**இயேசு :**
மன்னிக்காத மனதோடு என்னை அருந்துவதால் தான் எத்தனையோ பேர் தீராப் பகையுடனும் வர்ம வைராக்கியத்துடனும் என்னை அருந்துகிறார்கள். நீ பலிப்பீடத்துக்கு வரும்போது என்ன செய்யவேண்டும் என்று தெளிவாகக் கூறியுள்ளேன். அதற்கு நீ முக்கியத்துவம் கொடுத்து என் கட்டளைப்படி செய்தாயா? (இப்போது மீண்டும் ஒருமுறை மத்தேயு 5:23-26 வரை வாசி)

யார் யார் நம்மீது மன வருத்தமாக இருக்கின்றார்கள் என்று நினைப்போம். நாம் யார் மீது மன வருத்தமாக இருக்கின்றோம் என்று நினைத்து அவர்கள் ஒவ்வொருவரையும் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்தி அவர்களோடு ஒப்புரவு செய்து கொள்வோம். அவர்களை நேரில் சந்திக்கும் போது நாமே முதலில் சென்று சமாதானம் செய்து கொள்ள முடிவு எடுப்போம்.

**மன்னிப்புப் பாடல் :**
என் பகைவருக்கும் எனக்கும்

**இறுதியில் :**
மன்னிப்புப் பெற்ற, மன்னிப்பு கொடுத்த சந்தோஷத்தோடு இறைவனுக்கு நன்றி கூறி பாடுவோம்

**நன்றிப்பாடல்**

**முடிவு :**
நித்திய ஸ்துதிக்குரிய.....

**பணியாளர் தேவை**

மாபோளை - வத்தளையிலுள்ள முதியோர் இல்லத்தில் நடுத்தர வயதுள்ள பெண் சமையல்காரருக்கான வெற்றிடம் உள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள ஊதிய அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பத்தை கீழ்காணப்படும் விலாசத்திற்கு 2017.04.12ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும். Criteria Management (Pvt) Ltd, 290, D, R Wiewardena Mawatha, Colombo - 10.
(N5664)

## 03 குருத்து ஞாயிறு

### கழுதை

யூதர்களைப் பொறுத்தளவில் கழுதை தூய்மையின் அடையாளமாகும். கழுதையை வைத்தே சலவைத் தொழில் தூய்மையாக்கும் பணி செய்யப்பட்டது. அப்படிப்பட்ட தூய்மையின் விலங்கின் மீது தான். இயேசு தனது பயணத்தை தொடர்கின்றார்.

ஆகவே குருத்து ஞாயிறானது. ஆண்டவரில் தஞ்சம் புகுந்து அவரது வழியில் வாழ்வை அனுசரித்து வாழவும், துன்பங்களின் வழியாக மாட்சிமை அடைந்திடவும் இக்குருத்து ஞாயிறு எம்மை அழைத்து நிற்கிறது.

நமது வாழ்க்கைப் பயணத்தில்

வீழ்ச்சி இல்லாமல் மாட்சி இல்லை
சிலுவை இல்லாமல் மகிமை இல்லை
முள்முடி இல்லாமல் மணி முடி இல்லை
துன்பம் இல்லாமல் இன்பம் இல்லை
சாவு இல்லாமல் வாழ்வு இல்லை

**குருத்து ஞாயிறு இல்லாமல் பாஸ்கா இல்லை**

## 08 சிலுவை அடியில்

இந்த புனித வெள்ளியில் சிலுவையில் தொங்கும் இயேசுவைப் பார்த்து இவ்வாறு கூறுவோம்.
1. நம் குற்றங்களுக்காக இயேசு காயப்பட்டார்.
2. நம் தீச்செயலுக்காக அவர் நெறுக்கப்பட்டார்.
3. அவர் தம் காயங்களால் நாம் குணமடைந்த நான்.

சிலுவையில் தொங்கும் இயேசுவிடம் ஆண்டவரே உம் திருக்காயங்களை என் நெஞ்சில் பதியச் செய்யும். துன்பம் நம்மை பாதிக்கின்றது. அன்பும் நம்மைப் பாதிக்கிறது. இவை இரண்டையும் உம்மிடம் இருந்து கற்று புதுவாழ்வு வாழ வரம் தாரும். இயேசு இறந்தார் என்று ஏற்றுக்கொள்வது வரலாறு இயேசு எனக்காக இறந்தார் என்று உணர்ந்து ஏற்பது மீட்பு.

## 01 இலங்கை ஆயர் பேரவையின் வாழ்த்துச் செய்தி

சமாதானத்தின் கொடைக்காக கடவுளுக்கு நன்றி கூறி மகிழ்கின்ற இவ்வேளையில், வாழ்க்கையில் அடிப்படை தேவைகள் இல்லாமலும், பல்வேறு பொருளாதார ஏற்றத் தாழ்வுகளாலும் துன்புறும் ஒவ்வொருவரையும் நினைத்துக் கொள்ளுவோம். பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறு விதமான திட்டங்கள் இருக்கின்ற போதிலும், அதிகளவான எமது மக்கள் வறுமையில் சூழப்பட்டுள்ளதை நாம் காணுகின்றோம். எமது கிறிஸ்தவ சீடத்துவம் என்பது எப்போதும் தேவையில் இருப்பவரை பராமரிக்க அழைப்பதோடு, துன்புறுபவர்களில் இயேசுவின் முகத்தை கண்டுகொள்வதை எமது கடமை எனவும் எடுத்துக் கூறுகின்றது. ஆகவே உயிர்ப்பின் மகிழ்ச்சியானது எமது சீடத்துவத்தின் தன்மையை ஆழமாகக் கண்டுகொள்ள அழைப்பு விடுக்கின்றது. நாம் எம்மை சுற்றியுள்ள ஒவ்வொருவரின் நோவுகளையும் நீக்க எம்மால் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும். இதனால் அவர்கள் இயேசுவில் நம்பிக்கை கொள்வதிலும் அவர்தம் சீடராவதிலும் வரும் மகிழ்வினை எம் ஊடாக கண்டுகொள்வார்களாக. ஆகவே உயிர்த்த ஆண்டவர் தம் சீடர்களுக்கு அருளிய சமாதானத்தின் கருவிகளாக நாம் மாறுவோமாக.

அனைத்து விசுவாசிகளுக்கும், வாசகர்களுக்கும் உயிர்த்த இயேசுவின் மகிழ்வையும், சமாதானத்தையும் கூறி நிற்கின்றோம்.

## 02 வெள்ளவத்தையில்...

பவனியானது, மயூராபிளேஸ் புனித அந்தோனியார் தேவாலய முன்றலில் ஆரம்பமாகி, ஹவ்லக் வீதி, சுவிசுத்தாராமவீதி, பீற்றசன் ஒழுங்கை, ஹம்டன் ஒழுங்கை, மனிங்பிளேஸ், வழியாக காலி வீதிக்கு வந்து புனித லோரன்ஸ் தேவாலயத்தை அடையும். அங்கு பாடுகளின் 14வது நிலை இடம்பெறும். ஆண்டவனின் அருளினால் பெரியவெள்ளி, பகிரங்க விடுதலை நாளான சித்திரை புத்தாண்டுதினத்தன்று வருவதால் வாகன நெரிசல் இன்றி விசுவாசிகள் பயபக்தியுடன் இயேசுவின் திருப்பாடுகளினதும், மரணத்தினதும், வழிபாடுகளில் பங்குகொள்வதற்கு வசதியாக அமைகின்றது. தவக்காலத்தில் பச்சாத்தாப செபங்களிலும், ஒறுத்தல்களிலும் ஈடுபட விரும்பும் பங்குமக்கள், பக்திச்சபைகளுடன் வட்டார ரீதியாக இணைந்து ஒவ்வொரு திருப்பாடுகளின் நிலைகளிலும், தரித்து உரிய செபங்களையும், பாடல்களையும் ஒலிபெருக்கியின் உதவியுடன் நிகழ்த்துவார்கள். இவை மூன்று மொழிகளிலும் இடம்பெறும். செபத்துடன் கூடிய அமைதியான பகிரங்க வீதிவழித் திருப்பாடுகளின் வழிபாட்டை நடாத்துவதற்காக, காவல்துறையின் அனுமதி பெறுதல் போன்ற ஒழுங்குகளை அருட்தந்தை மனோகுமாரன் அடிகளார் செய்துவருகின்றார்.

**தகவல் : எஸ்.பி. டேவிட்**


## கண்டார் நம்பினார்

காற்று, தீ, சூரியன் மூவரும் நண்பர்கள். ஒருநாள் திக்கு காற்றின் வலிமை பெரிதா, சூரியனின் வலிமை பெரிதா என்ற சந்தேகம் வந்தது. இதை அவர்கள் இருவரிடம் கூறியது. ஒவ்வொருவரும் தாங்களே வலிமையானவர்கள் எனக் கூறிக் கொண்டார்கள். தீ "சரி ஒரு போட்டி வைக்கலாம்" என்றது அவ்வழியாக ஒரு மனிதர் வந்தார். தீ "அந்த மனிதர் போட்டுக் கொண்டிருக்கும் கனமான கோட்டை கழற்றி எறியச் செய்ய உங்களில் யாருக்கு வலிமை உள்ளதோ அவரே வலிமையானவர்" என்றது. இருவரும் ஏற்றுக்கொண்டனர்.

முதலில் காற்று அம்மனிதரைச் சுற்றிச் சுற்றி பலமாக பெரும் சூறாவளியைப் போல அடித்தது. அவர் கோட்டைத் தன் உடலில் சுற்றி இறுகப் பற்றிக் கொண்டார். பின் சூரியன் ஒன்றும் செய்யவில்லை வானத்தின் உச்சிக்கு வந்து சுள்ளென்று தன் கதிர்களைப் பாய்ச்சியது. அந்த மனிதர் சில நிமிடங்களில் கோட்டை உதறித் தள்ளிவிட்டுப் போனார். தீ தன் கண்களால் கண்டது. அது சூரியனின் வலிமையை நம்பியது.

கல்லறைக்கு முதலில் வந்து சேர்ந்த மற்ற சீடரும் உள்ளே சென்றார். கண்டார் நம்பினார் (யோவா 20:8)

இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா விடியற்காலையில் கல்லறைக்குச் சென்ற அனைவரும் கண்டது வெறுமையான கல்லறை. அந்தக் கல்லறை கூறிய செய்தி அதில் அடக்கம் செய்யப்பட்ட இயேசு உயிர்த்துவிட்டார். அதைத்தான் இயேசுவின் அன்புச் சீடர் கண்டார்



நம்பினார். இதுவரை பல்வேறு எண்ணங்களால் அலைக்கழிக்கப்பட்ட மனம் அவற்றை தூர எறிந்துவிட்டு உயிர்த்த கதிரவனாகிய இயேசுவின் வல்லமையை நம்பியது. இயேசுவின் அனைத்து சீடரும் இதை நம்பினர். நம்பியதை பறைசாற்றினர். அதையே இன்று நாமும் நம்புகின்றோம்.








# உயிர்ப்பு கவிதைகள்



இறந்த மனிதன் மீண்டும்
உயிர் பெறுவதே
உயிர்ப்பு என்றால்
இறக்கும் முன் பலமுறை
இறந்தவர்களாய்
தென்படும் நாம் -
எத்தனை முறை
உயிர்ப்பை சுவைக்க
வேண்டும்?

நம்மை ஈன்ற
பெற்றோரின்
முதுமையைக் கண்டு
முகம் கோண
நோக்கும்போது.....

பணம் பொருள் பதவி
என்ற மாயைகளில்
சிக்கித் தவிக்கின்ற
போது

உல்லாசமாய் தொலை
தொடர்பு சாதனங்களைக்
கையாளுகின்ற போது....

நம்முள்ளும் உயிர்ப்பு
விஸ்பரூபம் எடுக்க....

உயிர்ப்பு நம்மில்
உரமேற்ற வேண்டும்
உயிர்ப்பு நம் வாழ்வில்
ஒளியேற்ற வேண்டும்

உயிர்ப்பு நம்மில்
மாற்றத்தை விதைக்க
வேண்டும்

உயிர்ப்பு நம்முன் புது
சக்தியை ஊற்ற வேண்டும்

உயிர்ப்பு பிறரையும்,
நம்மையும் பலப்படுத்த
வேண்டும்

உயிர்ப்பு சமுதாய
தீமைகளை வேரறுக்க
வேண்டும்

அப்போது தான் நாமும்
இறைமகன் இயேசுவின்
உயிர்ப்பின் சாயலை
தாங்கி நிற்போம்.

உயிர்ப்பின் மக்களாய்
வாழ்வோம்
உயிர்ப்பை
உய்த்துணர்வோம்.

## சிந்திக்க...

வெள்ளைத் தாளாக
உன்னை உருமாற்றும்
தவக்காலம்
வெள்ளையடிக்கப்பட்ட
கல்லறை மனை
உன்னிலிருந்து
பிடுங்கி எறியுமா?

ஆணிகளால்
கிழிக்கப்பட்ட
இயேசுவின் உடலாக
ஆசிப்பவனே
ஏணி வைத்தால் கூட
அவர் இருதய அன்பை
பகுத்தறிபவர் யார்

கறைபடா இறையவனின்
காயங்களை
யோசிப்பவனே
மறைபொருளாய்
பதுங்கும்
துரோகக் காய மனது
இந்நாட்களில் கரையுமா?

முள்முடியில்
பிய்த்தெறியப்பட்ட
இறைமகனை உருகி
யாசிப்பவனே,
சமூக அடித்தட்டில்
பந்தாடப்படும்,
சாதி மத இன
ஆக்கிரமிப்பு முட்களாக
நான் இருக்கமாட்டேன்
என முடிவாகு

பச்சை மரமான
மீட்பரின்
இதயக் கனல் வடித்த
இரத்தத்துளி
பட்ட மரமான உன்னில்
உறங்கும்
வெளிச்ச இரக்க....
மனை வீதிக்கு எடுத்து
வருமா?

உண்மையா அது
என்ன?
என்று பிலாத்துவின்
கூட்டாளி நீயான
போதும்
உனது பழுதடைந்த
துர்நாற்ற வாயினின்று
பொய்மை பொசுங்கிப்
போகுமா?

இனிய மானிடா?
இன்னொரு நற்செய்தி
உனக்காக
என்னருமை மகனே /
மகளே
"நீ இன்று என்னோடு
பரகதியில்,
எனும் நல்வாக்கு
உனக்கும் சொந்தம்
என்றால்
இந்த உயிர்ப்பு
பெருவிழா
உன்னையும்
மனிதனாக்கியிருப்பதாக
மகிழ்ந்து கொண்டாடு.



# மகிழ்ந்து கொண்டாடு

# உயிர்ப்பு

**பிறப்புக்கும், இறப்புக்கும் இடையே**
**வாழ்வின் அர்த்தம் தேடும் மனிதா!**
**உயிர்த்தெழுதல் இருந்தால் சாவிலும் வாழ்வுண்டு**
**உயிர்த்தெழுதல் இல்லையேல் வாழ்விலும் சாவுண்டு**

**எனவே மனிதா உயிர்த்தெழு**
**தோல்வியிலிருந்து வெற்றிக்கு**
**சோம்பேறித்தனத்திலிருந்து சுறுசுறுப்புக்கு**
**பாவத்தில் இருந்து புது வாழ்விற்கு**
**பொய்மையில் இருந்து உண்மைக்கு**
**துன்பத்தில் இருந்து இன்பத்திற்கு**
**சோகத்திலிருந்து மறுமலர்ச்சிக்கு**

**ஆம் மனிதா?**
**ஒவ்வொரு மனமும் உயிர்த்தெழ வேண்டும்.**
**காரணம் உயிர்ப்பு என்பது மறுபிறப்பு.**
**ஆனால் அது இறப்புக்கு முன்னரே நிகழ வேண்டும்.**

**வீசும் புயல் காற்றை விடும் வரைக்கும் நின்றொதிர்க்க,**
**ஏற்றமிகு உத்வேகத்துடன் சமூக அநீதிகளை எதிர்க்க,**
**அன்பென்னும் ஆயுதத்தால் வன்முறைகளை களைய,**
**எழுச்சிமிகு எண்ணத்துடன் வாழ்க்கை நடத்த,**
**ஆற்றல்மிக்க அயராது உழைக்கும்**
**திருச்சபையை கட்டியெழுப்ப**
**மனிதமே நமது முதல் மதம் என் மனதில்**
**நிலைக்க வேண்டும் நமக்கு மறுபிறப்பு.**

**அதுவே நம் உயிர்ப்பு**
**உயிர்த்தெழுதல் இருந்தால் தான் வாழ்வுண்டு**
**இல்லையேல் வாழ்வில் தோல்வி தான் உண்டு.**

## உங்கள் அனைவருக்கும் உயிர்த்த இயேசுவின் அருளும் ஆசீரும் நிறைந்த உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்

# உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துப் பரிமாற்றம்

மக்கள்

விழுந்தவரே எழுந்தவரே உமக்கு வாழ்த்துக்கள்
மரித்தவரே மலர்ந்தவரே உமக்கு வாழ்த்துக்கள்
புதைந்தவரே புலர்ந்தவரே உமக்கு வாழ்த்துக்கள்
உறைந்தவரே உயிர்த்தவரே உமக்கு வாழ்த்துக்கள்

பாவத்தை நான் சுமக்க பாடுகளை சுமந்தவரே
சுகங்களில் நான் மிதக்க சோகத்தில் ஆழ்ந்தவரே
வஞ்சகம் நான் காத்தும் நெஞ்சகத்தில் காப்பவரே
பேராசையை நான் பறித்தும்
பரிவுகொண்டு பிறந்தவரே

புதுமைகள் செய்தவரே புரட்சிக்குள் புகுந்தவரே
சாதனைகள் படைத்தவரே சாத்தானை பகைத்தவரே
பிள்ளையெனை கைப்பிடித்தவரே
தன்னை கையளித்தவரே
சிந்தை கெட்ட எனைக்காக்க
சிலுவையிலே சிதைந்தவரே

சாதகங்கள் செய்து சாகவில்லை
சாகசங்கள் செய்து உயிர்க்கவில்லை

சித்திரவதைக்கு ஆளாகி சிரம் தாழ்ந்தீர்
சிதைத்தோர்க்கும் ஆசிகூறி வரம் தந்தீர்

விண்ணக தேவன் இறங்கி இறந்தீர்
கல்லறை கடந்து உயிர்த்து எழுந்தீர்
வந்தவரே வென்றவரே
உமக்கு வாழ்த்துக்கள் - எம்மில்
நின்றவரே நிலைத்தவரே உமக்கு வாழ்த்துக்கள்

உதட்டு மொழியால் ஒப்புக்கு வாழ்த்தவில்லை
உள்ளத்து வழியால் ஒப்பற்றவரை
வாழ்த்துகின்றோம்.

இயேசு

என் சாயலே, என் சார்பே எனக்காக வாழ்த்துக்கள்?
விண்ணுலகில் நீ உயிர்த்தாய்
உனக்கே வாழ்த்துக்கள்
மண்ணுலகு தாண்டியும் மலர்ந்தாய் வாழ்த்துக்கள்
தன்னுலகில் தவறாது, மாண்புடன் வாழுங்கள்.



# உறுதிப்படுத்தும் நாள்

**உன் பிறப்பில் மனிதனாய் உருவெடுத்தாய்**
**உன் இறப்பினில் தெய்வமாய் உருவெடுத்தாய் - ஆம்**
**இது உயிர்ப்பு நாள் அல்ல....**
**நீ உயிருடன் வாழ்வாய் என்று**
**உறுதிப்படுத்தும் நாள்**

**இது உயிர்ப்பு நாள் அல்ல,**
**பிறர் சுமையைச் சுமப்பவர் இறப்பதில்லை என்று**
**உறுதிப்படுத்தும் நாள்**

**இது உயிர்ப்பு நாள் அல்ல,**
**சிலுவைக்கும் இயேசுவுக்கும் உறவை**
**உறுதிப்படுத்தும் நாள்**

**இது உயிர்ப்பு நாள் அல்ல,**
**பிறரின் சுமையும் ஒரு சுகம் என்று**
**உறுதிப்படுத்தும் நாள்**

**இது உயிர்ப்பு நாள் அல்ல,**
**அநீதிக்கு கிடைத்த தோல்வி என்று**
**உறுதிப்படுத்தும் நாள்**

**ஆக இந்த உலகிற்கு கடவுளின் மகனாக வந்த**
**ஆண்டவர் இயேசு சாவை வெற்றி கொண்ட**
**மகிழ்ச்சியின் பொன்னாள்.**



# தமிழ், சிங்கள புத்தாண்டு



தமிழ் புத்தாண்டு என்பது தமிழர்கள் புதிய ஆண்டு பிறப்பதை கொண்டாடும் விழாவாகும். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பிற நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் சித்திரை மாதத்தின் முதல் நாளை புத்தாண்டாக கொண்டாடுகிறார்கள். தமிழர்களது கண்காணிப்பு முறையின் படி ஒரு ஆண்டுக்குரிய 12 மாதங்களில் சித்திரை மாதமே முதலாவது மாதமாக கருதப்படுகின்றது. சித்திரை மாதம் 31 நாட்களை கொண்டது. ஆங்கில நாட்காட்டியில் ஏப்ரல் மாதம் 14ம் திகதி தொடக்கம் மே மாதம் 14ம் திகதி வரை தமிழ் சித்திரை மாதமாகும்.

புதிய எதிர்பார்ப்புக்களையும், நம்பிக்கை- களையும் வைத்து மங்களகரமான திருநாளாக சித்திரை வருடம் வரவேற்கப்படுகின்றது. சித்திரை மாதம் பிறந்ததும், “இளவேனிற்காலம்” எனும் வசந்த காலம் தொடங்குகிறது. வசந்த காலத்தில் மாமரங்களில் மாந்தளிர்களும், மலர்களும் பூத்துக் குலுங்கும். அச்சமயம் வேப்ப மரங்களில் வேப்பம் பூக்களும் பூத்துக் குலுங்கும். மனித வாழ்க்கை இனிப்பும், சகப்பும் கலந்ததே என்பதை எடுத்துக் காட்டும் அம்சமாக திகழ்கிறது.



இப்புதுவருடத்தை பழங்காலம் தொட்டே தமிழர்கள் கொண்டாடி வருகின்றார்கள். இலங்கையிலும் சிங்களவர்கள் சித்திரை மாதத்தின் முதல் நாளை புத்தாண்டாக ஆரம்ப காலம் தொடக்கம் கொண்டாடி வருகின்றார்கள். இந்த புத்தாண்டு கொண்டாட்ட முறை இலங்கையில் பழங்காலத் தமிழர்கள் வழியாக தோற்றம் பெற்ற தமிழ் புத்தாண்டாகும். சிங்களவர்களும் இதனை கொண்டாடுவதனால் “தமிழ் சிங்கள புத்தாண்டு” என அழைக்கின்றோம்.

பண்பாட்டின் உயர்ந்த அம்சங்களை வெளிப்படுத்தும் வகையிலும் கொண்டாடப்படும் சமூக விழாவான புது வருடத்தில் இறைவழிபாடும், விருந்தோம்பல், தானதர்மம், ஆசி பெறுதல் என்பன சிறப்புமிக்க, கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களாக இருக்கின்றன. இதனை சிறப்பாக கடைப்பிடித்து கொண்டாடவும், மலர்ந்துள்ள புதிய ஆண்டு அமைதியும் சுபீட்சமும் நிறைந்த ஆண்டாக அமையும். எம் சகோதர சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள் கூறி, அவர்களுடைய புத்தாண்டில் கலந்து கொள்வோம். புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**ஆக்கம் : சகோ. டிலோய்ட்சன் பெர்னான்டோ**

## “மலர்ந்தது புத்தாண்டு
## மணந்தது புதுவாழ்வு
## மகிழ்ந்தது மனங்கள்
## மாறியது நெஞ்சம்”

புதுமை படைத்திட புரட்சி மறைந்திட
புதுவாழ்வு மலர்ந்திட புனிதம் வளர்ந்திட
புத்தம் புதிய ஆண்டேபூரிக்கின்றது உள்ளம்.
பூவுலகெங்கும் புகழ்ச்சிப் பாக்கள் பாடிட
**வருக புத்தாண்டே**

வாராயோ புத்தாண்டே வாழ்க்கையை வளம்படுத்த,
வசந்த காலமாய் காலங்கள் மாறிட
வாழ்த்துகின்றேன் ஆண்டே வரவேற்கிறேன் மகிழ்ந்து
வாயாரப் புகழ்ந்து பாடுகிறேன் உன் வரவை
**வருக புத்தாண்டே**

சாந்தி, சமாதானம், சகோதரத்துவம் வளர்க்கப்பட
சமத்துவம், சந்தோஷம் சகலர்க்கும் கிடைக்க
சந்திக்கும் சவால்களில் சத்தியம் தளைக்க,
சமுதாயத்தில் சாதி, சமய, பாகுபாடுகள் களையப்பட
**வருக புத்தாண்டே**

இறைவழியில் இலட்சியங்கள் இகத்தில் பரவிட,
இனிதே வாழ்வில் இன்பம் பொங்கிட
இழந்த மனித மாண்பு மீண்டும் உருவாக்கப்பட
இவ்வாண்டில் புதிய நம்பிக்கை புதிதாய் பிறந்திட
**வருக புத்தாண்டே**

வருக புத்தாண்டே! ஒளிர்க புத்தாண்டே!
வாழ்க புத்தாண்டே! ஓங்குக புத்தாண்டே!
புது இலட்சியங்கள், புது விழுமியங்கள் புதிய அரசு



அருட். சகோ. டெலாறோஸ் அ.க

பிறக்கும்
இனிய தமிழ் புத்தாண்டு
நம் அனைவரின்
வாழ்விலும் அன்பையும்,
மகிழ்ச்சியையும்,
நோய் இல்லாத
வாழ்வையும்,
குறைவில்லாத
செல்வத்தையும்
கொடுக்கும் ஒரு புதிய
புத்தாண்டாக மலர
வாழ்த்துக்கள்!

உலகின் எந்த நாட்டில்
வாழ்ந்தாலும் தமிழ்
புத்தாண்டு
நாம் கொண்டாடும்
நம் தமிழர்களின்
பண்டிகை,
நாளும் நட்சத்திரமும்
தாண்டி நாம்
அனைவரும் தமிழர்கள்
என்பதில் பெருமிதம்
கொள்வோம்!
இந்த ஆண்டு
நம் வாழ்வில்

எல்லாவிதமான
வெற்றியையும்
அன்பையும்
சகோதரத்துவத்தையும்
அள்ளி கொடுத்து.

தமிழர் நாம்
ஒன்றாகி வென்றாக
வேண்டுமென்று
இந்நாளில்
இறைவனை வேண்டி
வாழ்த்துகின்றோம்..

# தமிழ் புத்தாண்டு

2017

# சித்திரைப் பெண்ணாள்

சித்திரைப் பெண்ணாள்
இத்தினம் வந்தாள்
சித்திகள் பெற்று
சிறப்புடன் வாழ்வாள்
நித்திய இன்பம்
நிலைத்தே இன்புற
நித்தமும் வாழ்வில்
குற்றங்கள் களைவோம்

சத்திய வாழ்வில்
சங்கடம் நீங்க
உத்தம குணத்துடன்

உலகினில் வாழ்வோம்
உன்னத பிறப்பில்
உயர்வாய் திகழ
உள்ளன்பு குன்றா
உண்மையாய்
வாழ்வோம்

வித்தைகள் பெருகியே
விண்ணையும்
அளப்போம்
விடுதலை
மனிதனாய்

விக்கினம்
தொலைப்போம்
தலைவிதி எண்ணி
தலைகெட்டுப் போகாது
சரித்திரம் படைக்க
முனைப்புடன்
துணிவோம்


**எமது தமிழ், சிங்கள சகோதர சகோதரிகள்
அனைவருக்கும் இனிய தமிழ் சிங்கள
புத்தாண்டு வாழ்த்துகள். பிறந்திருக்கும் வருடம்
அனைவருக்கும் வெற்றியைத் தரும் நல்லாண்டாக
அமைவதோடு துன்பங்கள் நீங்கி இன்பம் பொங்க
வாழ்த்துகின்றோம்.**

**அனைவருக்கும்
புதுவருட வாழ்த்துக்கள்**






# உயிர்ப்புத் தேவை எம் வாழ்விலும்



**‘உனையன்றி உனைப் படைத்த இறைவன் உன் துணையின்றி உனை மீட்க மாட்டார்’**

புனித அகுஸ்தினார்

வரலாற்றின் பக்கங்களை நாம் புரட்டிப் பார்க்கும்போது நீதி நிலைநாட்டப்பட்ட நிகழ்வுகளை விட அநீதி நிலைநாட்டப்பட்ட நிகழ்வுகளே அதிகமாகக் காணப்படுகின்றது. அநீதிகளும் அக்கிரமங்களும், கொலைகளும், கற்பழிப்புகளும், நாளாந்தம் அரங்கேறும் இடமாக இன்றைய உலகம் மாறிவிட்டது. இவற்றைக் கண்டுவிட்டு இது எனக்கில்லை என்ற நிலையில் எம்மில் அனேகமானோர் எம் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றோம். அடுத்த வீட்டில் யார் இருக்கிறார்கள். அங்கே என்ன நடக்கின்றது என்று அறியாது நானும் எனது குடும்பமும் என்ற நிலையில் நாம் இருக்கின்றோம். இருளுக்கும், ஒளிக்குமிடையிலான போராட்டம், நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போராட்டம் அநீதிக்கும் நீதிக்கும் இடையிலான போராட்டம். உண்மைக்கும் பொய்மைக்கு மிடையிலான போராட்டம். காலம் காலமாக வரலாற்று மேடையில் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றது. மனிதன் எவ்வளவோ கண்டுபிடிப்புகளைக் கண்டு பிடித்தாலும் மனிதன் மனிதனாக வாழத் தவறி விடுகின்றான். மனிதன் மனிதத்தைத் தொலைத்து விட்டான். இவற்றை தொலைத்து விட்ட நாம் எமது ஆன்மீகத்தை தேடி அலைகின்றோம். தவக்காலம் என்றவுடன், பட்டியல்கள் பலபோட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றோம். ஆனால் அன்பிற்காக நீதிக்காக ஏங்கும் எம் சகோதரர்களின் தேவைகளைக் கண்டும் காணாது வாழ்கின்றோம். இந்நிலையில் இருக்கும் எமக்கு இயேசுவின் உயிர்ப்பு விடுக்கும் செய்தி என்ன? மக்களோடு மக்களாகி வாழ்ந்தவர் இயேசு வாழ்வை இழந்து சமுதாய விளிம்பில் வாழ்ந்த மக்களை, சமுதாயத்தின் நடுவிற்கு அழைத்து வந்தவர் இயேசு. மனித மாண்பு காத்து சுய நிர்ணத்துடன் வாழ வீழ்ந்து கிடந்த மனிதத்தை கட்டியெழுப்பியவர் இயேசு. இயேசுவின் இப்பணியை அவர் நட்புடன் செய்தார். “தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை என நம்பினார். (யோவான் 15:13) பிறருக்கு வாழ்வு கொடுக்க விரும்புகிறவன் தன் வாழ்வை எப்படிக் காத்துக் கொள்வது. இயேசுவின் நட்பு உயிரை இழந்து வாழ்வு தரும் நட்பாகியது. மக்களுக்கு வாழ்வு கொடுக்க வந்தோம் எனக் குரல் எழுப்பி பணி தொண்டு என அலையும் சமய சமூக அரசியல் தலைவர்கள் சிலுவையை நிமிர்ந்து பார்க்க வேண்டும். வெளிப்பகட்டான நட்பு, வேடிக்கைத் தனமான உறவும் வளர்த்து மனிதத்தை மதிக்காத பணியாளர்கள் எமது சமுதாயத்திற்கு தேவையற்றவர்கள். சூழ்ச்சி, சதித்திட்டம் மனித எதிர்பார்ப்பு அனைத்தையும் கடந்து ஆக்கப் பூர்வமாக கடவுளின் வல்லமை செயல்படுகின்றது என்பதை இயேசு உயிர்ப்பு உணர்த்துகின்றது. இன்று நாமும் எமது சமுதாய வட்டத்திற்குள் எத்தனை விதமான மனிதர்களைக் காண்கின்றோம். சூழ்ச்சி சதித்திட்டம் அன்று இயேசுவிற்கெதிராக நடைபெற்றவை மட்டுமல்ல, இன்றும் ஏன்? சொந்த தாய், தந்தை, சகோதர, சகோதரிகளுக்கு எதிராக எத்தனை சதித்திட்டங்களை நாம் காண்கின்றோம். தவக்காலத்தில் எதுவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்ய நாம் தயார். எத்தனை திருயாத்திரைகளும் செல்லத் தயார். ஆனால் எனது அயல் வீட்டாரின் தேவையைக் கண்டுகொள்ள எம்மில் பலருக்கு இடமில்லை. இயேசுவின் உயிர்ப்பு விழாவில் நாம் அர்த்தமுள்ள விதத்தில் பங்கு கொள்ள வேண்டுமாயின் வீண் செலவுகளையும் வீராப்பான தவக்கால செயல்களையும் விட்டு விட்டு எம் அயலவரில் இயேசுவின் உயிர்ப்பைக் கொண்டாடுவோம். அவர்களுக்கு நாம் செய்யும் சிறிய சிறிய உதவியினால் இயேசுவின் உயிர்ப்பைக் கொண்டாடுவோம். இன்று வாழவும் வழி தெரியாமல் அச்சம் கொண்ட உள்ளங்கள் எம்மிடையே நடமாடவில்லையா? அவற்றை நாம் காண்கின்றோமா? சிலுவைப்பாதை சிந்தனைகளை விதவிதமாக எழுதி சிந்தனைக்கு விடுகின்றோம். ஆனால் அவை எமது வாழ்வாக மாறுகின்றதா? எமது வாழ்வியலே வாழ வேண்டியவற்றை தவிர்த்து விட்டு மற்றவர்கள் இப்படி வாழ வேண்டுமென்று நினைக்கின்றோமே தவிர நாம் இப்படி வாழ வேண்டுமென்று சிந்திப்பதில்லை. மற்றவர்களின் குற்றங்களை பெரிது படுத்தி சங்கு ஊதுகின்றோமே ஒழிய எமது குற்றங்களை நாம் காண மறுக்கின்றோம். இதுவே இயேசுவின் காலத்திலும் நடந்தது. இயேசு கூறிய நெறி முறைகளை விரும்பாதவர்கள் இயேசுவின் அரசிற்கு எதிராக எழும்பினார்கள் ஆனால் இயேசு அனைத்தையும் வென்று வெற்றி வீரணாக உயிர்த்தெழுந்தார். உனையன்றி உனைப்படைத்த இறைவன் உன் துணையின்றி உனை மீட்க மாட்டார்” மிக ஆழமான கருத்துக்கள் பொதிந்த புனித அகுஸ்தினாரின் இந்த வரிகளே உயிர்ப்பு எனும் ஆன்மீகத்தின் சாரம். கடவுளின் ஒரே மகனாகிய இயேசு கிறிஸ்து அடிமையின் கோலம் பூண்டார். தமது மீட்பால் முழுமையாக அர்ப்பணித்து வெறுமையானார். பாவம் என்னும் அடிமை வாழ்விலிருந்து மீட்டு, இறைவனின் மக்களாக நம்மை மாற்றுகின்றது. இந்த உயிர்ப்பு விழா. இந்த மீட்பை நிலைநிறுத்திக் கொள்வது அவரவர் கைகளில்தான் உள்ளது.

மீட்பு எனும் கொடை அனைவருக்கும் வழங்கப்பட்டது. அதை நமதாக்கி வாழ்வது நமது வாழ்க்கை முறையினால்தான் என்பதை உணர்ந்திடுவோம். உயிர்ப்பின் உண்மை கருவிகளாக மாறிடுவோம். இயேசுவின் உயிர்ப்பு விழா ஒரு வரலாற்று நிகழ்வாகும். ஆனால் இது எம் ஒவ்வொருவரின் வாழ்விலும் நடந்தேறும் நாளாந்த நிகழ்வாகும். நாமும் உயிர்த்தெழ வேண்டும். எமது அடிமை வாழ்விலிருந்து உயிர்த்தெழ வேண்டும். எமது ஆணவம் அகங்காரங்களிலிருந்து உயிர்த்தெழ வேண்டும். இவையெல்லாம் கல்றைக்குள் சமாதியாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் நாமும் இயேசுவின் உயிர்ப்பு விழாவில் அர்த்தமுடன் பங்கெடுக்க முடியும்.

கல்லறையைக் காணச் சென்ற சீடர்களுக்கு கொடுக்கப்பட்ட செய்தி அஞ்சாதீர்கள். புறப்படுங்கள். இயேசுவின் உயிர்ப்பு விழாவில் பங்கெடுக்கும் எமக்கும் அஞ்சாதீர்கள் புறப்படுங்கள், வாழக்கையில் வரும் சவால்களை எதிர்கொள்ளுங்கள். உங்களோடு நான் இருக்கின்றேன். என்ற இயேசுவின் உடனிருப்பை நமதாக்கிக் கொள்வோம். அவரின் உண்மைச் சாட்சிகளாக வாழ்வோம். ஏனையோரையும் வாழவைப்போம் சாலோம் அல்லேலூயா

**அருட்சகோதரி சாந்தனா**
**அதிபர்**
**புனித அந்தோனியார்**
**த.மகா வித்தியாலம்**
**கொழும்பு 14**




கல்லறைகள் வாழ்வின் முடிவிடங்கள் அல்ல,
முடிவில்லா வாழ்வின் பிறப்பிடங்கள்
உலகிலுள்ள கல்லறைக்
கல்வெட்டுக்கள் அனைத்தும்
ஒரு சேர உரைப்பது
***‘இங்கே உறங்குகிறவர் இன்னார்’***
ஒரே ஒரு கல்லறையில் மட்டும் கல்வெட்டுப் போல
வானதூதர் சொல்லி சென்றது ***‘அவர் இங்கே இல்லை’*** (மத்தேயு 28:6)

அதுதான் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு
கல்லறைக் கற்கள் சவங்களுக்குத்தானே
***இயேசுவுக்கல்ல***

இயேசுவின் வாழ்வுக்கு ~ கடவுள் தந்த தீர்ப்பு சாவு
கடவுள் திருத்தி எழுதிய தீர்ப்பு ***உயிர்ப்பு***
இயேசுவின் உயிர்ப்பு நடந்து முடிந்த ஒன்று அல்ல
இன்றும் என்றும் நடந்து கொண்டிருக்கும் ஒன்று



## சிந்தனைக்கு!!!

நமது கண்கள்
திறந்து இருந்தாலும்,
அறிவுக் கூர்மையாக இருந்தாலும்,
ஞானம் நிரம்பியிருந்தாலும்,
இயேசுவைக் குறித்து மற்றவர்களோடு
பகிரும் போதுதான் அவரைப் பற்றியும்
அவரது பிரச்சன்னத்தைப் பற்றியும்
உணர முடியும்






ஞான ஒளி
GNANA OLI
உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்

# குடும்பங்களுக்கு ஆண்டவர் தருகின்ற உயிர்ப்பின் கொடைகள்



எல்லா நாள்களுமே பிறந்த நாளாக இருக்க முடியுமா? எல்லா நாள்களுமே திருமண நாளாக இருக்க முடியுமா? கற்பனையில் இதை நினைத்துப் பார்க்க முடியுமே தவிர உண்மையில் பிறந்த நாளோ அல்லது திருமண நாளோ ஆண்டுக்கு ஒருமுறைதான் இருக்க முடியும். ஆனால் ஆண்டில் எல்லா நாள்களுமே உயிர்ப்பு திருநாளாக இருக்க முடியுமாக என்று கேட்டால் உறுதியாக இருக்க முடியும் என்று சொல்லலாம். எப்படி என்று கேட்கத் தோன்றுகின்றதா? நாம் ஒவ்வொரு நாளும் பங்கேற்கின்ற திருப்பலி இயேசுவின் பாடுகளையும், இறப்பையும் மற்றும் உயிர்ப்பையும் எண்பிக்கின்றது. ஒவ்வொரு திருப்பலியும் உயிர்ப்பின் நாள்தான். உயிர்த்த ஆண்டவரின் அருளாசீர் ஆலயத்துக்குள் மட்டும் முடங்காமல் ஒவ்வொரு குடும்பத்திலும் தினந்தோறும தொடர்கிறது. உயிர்த்த ஆண்டவர் மனத்திடம், மகிழ்ச்சி, அமைதி, நம்பிக்கை மற்றும் அதிகாரம் ஆகிய ஐந்து கொடைகளையும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் உயிர்ப்பின் கொடையாகத் தருகின்றார். இந்தக் கொடைகள் திருத்தூதர்கள் வாழ்வில் எப்படி இருந்தது மற்றும் இன்று குடும்பங்களில் எப்படி பார்க்கப்படுகின்றது.

## 1. மனதிடன் அன்றும் இன்றும்

இயேசு தன்னுடைய பணிவாழ்வில் இறப்புக்கு முன்னும் பின்னும் பல முறை திருத்தூதர்களையும் மக்களையும் பார்த்துக் கூறிய வார்த்தை அஞ்சாதீர்கள். பல இடங்களில் மக்களின் அச்சத்தை அகற்றி இறைநம்பிக்கையை அதிகப் படுத்துவதற்காகவே இவ்வார்த்தையை எடுத்துக் கூறுகிறார். பேதுரு கடல்மீது நடந்து செல்கையில் நம்பிக்கை குன்றி மூழ்கியதும் இயேசு அவரைக் காப்பாற்றி நம்பிக்கையுடன் உறுதியுடனும் வாழ்ந்திட இயேசு பேதுருவைப் பார்த்து ***அஞ்சாதீர்கள் (மத் 14:27)*** என்கிறார். அதுபோன்று இயேசுவின் தோற்றம் மாறுதலைக் கண்டு அஞ்சி நடுங்கிய சீடர்களிடம் இயேசு ***அஞ்சாதீர்கள் (மத் 17:7)*** என்றகிறார். இயேசு உயிர்த்தெழுந்து திருத்தூதர்கள் முன் தோன்றியபோது அச்சமுற்ற அவர்களைப் பார்த்து ***அஞ்சாதீர்கள் (மத் 28:10)*** என்றார். எனவே திருத்தூ தர்களின் அச்சத்தை அகற்றி அவர்களின் நம்பிக்கையை இயேசு வலுப்பெறச் செய்தார் என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

இன்று ஒவ்வொரு குடும்பமும் அச்சம் என்னும் கப்பலில் தான் பயணம் செய்கின்றது. அரசியல் தலைவர்கள், அரசு அதிகாரிகள் நினைத்து பயம், என்றெல்லாம் மனித வாழ்வில் அச்சம் நீண்டு கொண்டே செல்கின்றது. அச்சமின்றி எந்தவொரு நிகழ்வையும் இன்று நம்மால் நினைத்து பார்க்க முடியவில்லை. இந்தச் சூழலில் இயேசு ஒவ்வொரு குடும்பத்திற்கும் உயிர்ப்பின் கொடையாகத் தருவது ***அஞ்சாதீர்கள், நானிருக்கின்றேன்*** என்று.

## 2. மகிழ்ச்சி அன்றும் இன்றும்

உயிர்த்த ஆண்டவர் திருத்தூதர்களுக்கும், மக்களுக்கும் கொடுத்த இரண்டாவது கொடை ***மகிழ்ச்சி***. இயேசுவின் உடனிருப்பை இயேசுவின் சீடர்களும், மக்களும் மகிழ்ச்சியாகக் கருதினர். எல்லா இடங்களிலும் ***மகிழ்ச்சி*** என்னும் கொடையை வழங்கியவர் இயேசுவே. இயேசு இறந்ததும் அவரது இறப்பைக் கண்டு அஞ்சி நடுங்கிய சீடர்களுக்கு இயேசுவின் உயிர்ப்பு மீண்டும் ***மகிழ்ச்சி***யை அளித்தது. (மத் 28:8, யோவான் 20:20)

இன்று மகிழ்ச்சியை விரும்பாதவர்கள் எவரும் இருக்க முடியாது. எல்லாருமே மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்றுதான் விரும்புவார்கள். இறை விருப்பமும் இதுவாகத்தான் இருக்க முடியும். ஆனால் இன்றைய எதார்த்தமான சூழலில் எப்படி வாழ்க்கை அச்சமாக மாறிவிட்டதோ அதுபோலவே வாழ்க்கை துன்பமாகவும் மாறிவிட்டது. அச்சத்தோடு துயரத்தோடு, மனக்கவலைகளோடு வாழ்பவர்களுக்கு இயேசு தனது உயிர்ப்பால் மகிழ்ச்சியைக் கொடையாகத் தருகிறார். நமது அழுகையை, துயரத்தை மகிழ்ச்சியாக மாற்றுகிறார். (எஸ் 9:17, எரே 31:13, தோபி 7:16, யோவா 16:20) இதை எத்தனை பேர் உணர்ந்திருக்கின்றோம்?

## 3. அமைதி அன்றும் இன்றும்

யூதர்கள், கிரேக்கர்கள் ஒவ்வொரு முறையும் பிறரைச் சந்திக்கின்றபோது ***உங்களுக்கு அமைதி உரித்தாகுக!*** என்று வாழ்த்துக்கூறுவர். திருத்தூதர் பவுல் தன்னுடைய எல்லாக் கடிதங்களிலும் ***உங்களுக்கு அமைதி உரித்தாகுக!*** என்று தனது முன்னுரையில் குறிப்பிட்டிருப்பது தெளிவாகிறது. இயேசு தனது திருத்தூதர்களுக்கு வழங்கிய மூன்றாவது உயிர்ப்பின் கொடை ***அமைதி.*** உயிர்த்த ஆண்டவர் தனது திருத்தூ தர்களைப் பார்த்துக் கூறிய வார்த்தை ***உங்களுக்கு அமைதி உரித்தாகுக! (லூக் 24:36, யோவா 20:19, 21:26)*** என்பதாகும்.

உயிர்த்தெழுந்த இயேசு ஒவ்வொரு முறையும் சீடர்களையும் பார்த்து ***உங்களுக்கு அமைதி உரித்தாகுக!*** என்கிறார். இதுவெறும் வாழ்த்துக் கூறுவது அல்ல. அமைதி என்பது ஷாலோம் என்னும் எபிரேயச் சொல்லின் மொழிபெயர்ப்பு. இச்சொல்லின் முழுப் பொருள் ***யாவும் நலமே அமைக. நலமே வாழ்க*** என்பதாகும். எனவே அமைதியின் முழுப் பொருள் நல் வாழ்வாகும். இயேசு தனது சீடர்களின் மனநிலையை நன்றாக அறிந்து வைத்திருந்தார். இயேசு. துனது இறப்பினால் சீடர்களின் குழுமத்தில் மேலோங்கிய அச்சம், என்ன செய்வதென்று தெரியாத குழப்பம், யார் பெரியவர், என்ற போட்டி, போன்ற மனநிலைகள் கண்டிப்பாகச் சீடர்கள் குழாமில் இருந்திருக்கக் கூடும். இவர்களின் மனநிலையை நன்கு அறிந்தவராக, குழப்பங்கள் நீங்கி யாவும் நலமாக அமைய ***அமைதி*** என்னும் கொடையை இயேசு தன் சீடர்களுக்கு உயிர்ப்பின் கொடையாக வழங்குகின்றார். அதே கொடையைத் துன்பங்கள், கவலைகள், பிரச்சினைகள், குழப்பங்கள் நிறைந்த குடும்பங்கள், நிறைவான, நலமான வாழ்வைப் பெற்றிட ***அமைதி***யைக் கொடையாகத் தருகிறார் இயேசு.

## 4. நம்பிக்கை அன்றும் இன்றும்

இயேசுவின் உயிர்ப்பே கிறிஸ்தவ வாழ்வின் விசுவாசத்திற்கு அடிப்படை ஆதாரமாக அமைகின்றது. இயேசு உயிர்த்தெழவில்லை என்றால் இன்று நாம் கிறிஸ்தவர்களாக இருந்திருக்க முடியாது. பயந்து நடுங்கிய சீடர்களின் **நம்பிக்கை**யை அதிகப்படுத்தவே இயேசு அவர்கள் முன் தோன்றி பேசி, உரையாடி உணவு உட்கொள்கிறார். இயேசுவின் மீது கொண்டுள்ள **நம்பிக்கை**தான் நிறைவாழ்வின் தொடக்கமாக அமைந்து இருந்தது. இயேசுவின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் அனைவரும் நிறைவாழ்வைப் பெற்றனர் என்பதை விவிலியத்தில் காண்கின்றோம்.

இதே **நம்பிக்கை** என்னும் கொடையை உயிர்ப்பின் கொடையாகக் குடும்பங்களுக்கு இயேசு வழங்குகின்றார். குடும்பங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் சந்தேகம் என்னும் நோய். குடும்பங்களில் சந்தேகங்கள் நீங்கி **நம்பிக்கை**யில் வாழ **நம்பிக்கை**யைக் கொடையாகத் தருகிறார் இயேசு. இன்று குடும்பங்களில் சந்தேகங்கள் மேலோங்கி, கொடையைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றுதான் சொல்ல முடியும்.

## 5. அதிகாரம் அன்றும் இன்றும்

உயிர்த்த ஆண்டவர் தனது சீடர்களுக்கு வழங்கிய ஐந்தாவது கொடை ***அதிகாரம்*** என்னும் கொடை. ***அதிகாரம்*** என்பது மற்றவர்களை ஆளுகின்ற அல்லது அடக்குகின்ற ***அதிகாரம்*** அல்ல. மாறாக, துணையாளராம் தூய ஆவியின் துணை கொண்டு பிறரது பாவங்களை மன்னிக்கின்ற அதிகாரத்தை இயேசு தனது சீடர்களுக்கு வழங்குகின்றார் (யோவா 20: 22,23) மேலும், நற்செய்தியைப் பறைசாற்றவும், எல்லா மக்களினத்தாரையும் சீடராக்கவும், திருமுழுக்கு கொடுக்கவும் அதிகாரத்தை இயேசு திருத்தூதர்களுக்கு வழங்குகின்றார் (மத் 28:18,19). உயிர்த்த ஆண்டவர் இன்று குடும்பங்களுக்கு தருகின்ற அதிகாரம் என்னும் கெடை எப்படி: கணவனை மனைவியை அல்லது மனைவி கணவனை அடக்கி ஆளுதலோ அல்லது வசதி படைத்தோர் ஏழ்மை நிலையில் இருப்போர் மீது அதிகாரம் செலுத்துவதோ அல்ல மாறாக அன்பு என்னும் அதிகாரத்தைக் கையில் எடுப்பதாகும்.

தொடக்காலத்தில் மறைப்பணியாளர்கள் திருவிவிலி -யத்தைக் கையில் ஏந்தி உயிர்த்த ஆண்டவரைக் கிறிஸ்துவை அறியா மக்களுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தனர். எனவே நமது வார்த்தையால், வாழ்வால் நற்செய்தியைப் பறைசாற்ற முடியும்.

எனவே அன்பு குடும்பங்களே! உயிர்த்த ஆண்டவர் நமக்குத் தருகின்ற ***மனத்திடம், மகிழ்ச்சி, அமைதி, நம்பிக்கை*** மற்றும் ***அதிகாரம்*** ஆகிய ஐந்து கொடைகளையும் ஒவ்வொரு நாளும் நம்மில் தொடருவோம்.

**நன்றி : பிரான்சிஸ்கன் ஒலி – 2016,**

## அநீதியின் வெற்றி தற்காலிமானது. அன்பின் வெற்றி நிரந்தரமானது



### 3 நாட்களுக்கு மட்டும்

ஒரு முறை ஒருவர் அரிமத்தியாவூர் யோசேப்பிடம் “உன்னுடைய கல்லறை ஓர் அற்புதமான நல்ல கல்லறை அல்லவா? அதை எப்படி நீ நாசரேத்தூர் இயேசுவுக்கு கொடுக்க முன் வந்தாய்?” என்று கேட்டபோது, “ஓ... அதுவா!!! அவர் மூன்று நாட்களுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ளக் கேட்டார். நானும் கொடுத்தேன்” என்று பதில் தந்தாராம்.

இயேசு சாகடிக்கப்பட்டு, கல்லறையில் வைக்கப்பட்ட போது அவரின் அன்பு அழிக்கப்பட்டு இறையாட்சி மதிப்பீடுகள் ஒன்றுமில்லாமல் ஆக்கப்பட்டது போன்று தோன்றியது. ஆனால் அது தோற்றம் மட்டுமே (Just an Illusion). இறுதி வெற்றி பிலாத்துவுக்கோ, தலைமைக் குருவுக்கோ அல்ல, இயேசுவுக்குத்தான் . இயேசுவுக்கு மட்டும்தான் என்பதை அறிந்து கொள்வோம்...

# இனிய வாசகர்களுக்கு

## உங்கள் உள்ளங்களுக்கும்
## இல்லங்களுக்கும்
## அன்பும், சமாதானமும் நிறைந்த
## உயிர்த்த ஆண்டவரின் பெருவிழா
## நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!!!

### கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின்
### இயக்குனர், ஆசிரியர்கள் மற்றும்
### பணி புரியும் ஊழியர்கள்

பாரின் பாவம் நீக்கிடவே
பாரச் சிலுவைதனை ஏற்று
பரமன் சித்தம் நிறைவேற
தன்னுயிர் தனையே தந்தவராம்
எம் பெருமான் இயேசு

மண்ணின் மாந்தர் வாழ்ந்திடவே
குருதி தனையே சிந்தி இன்று
மனிதர் யாவருக்கும்
புது வாழ்வு தனையே ஈந்தவராம்

பரமனின் சித்தம் நிறைவேற்றி
பாருக்கு புத்தொளி தந்திடவே
மரணம் வென்று உயிர்த்தெழுந்தார்
அலகையின் ஆட்சியில்
வெற்றிக் கொண்டார்

உயிர்த்த ஆண்டவர்
எமக்களித்த
பாஸ்கா விழா தனையே
மாந்தர் நாமும் கூடியிங்கு
மகிழ்வுடனே
கொண்டாடிடுவோம்!!!

**அல்லேலூயா அல்லேலூயா**






அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்